## <u>ஆசிரியரிடமிருந்து...</u>

கர்த்தருக்குள் அன்பான மணவாட்டி வாசகர் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் நல்வாழ்த்துக்கள். தேவ கிருபையும் சமாதானமும் தொடர்ந்து உங்கள் யாவரோடும், உங்கள் குடும்பத்தோடும், ஊழியத்தோடும் இருப்பதாக.

மணவாட்டி பத்திரிக்கை ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவுற்று 26-வது ஆண்டுக்குள் பிரவேசிக்கிறது. ***ஒவ்வொரு மாதத்தின் முதலாம், மூன்றாம் வெள்ளிக் கிழமைகளில் காலை 6.30 மணிமுதல் 7.00 மணிவரை <u>தமிழன் டி.வி.</u> மற்றும் அனைத்து சனிக் கிழமைகளிலும் காலை 6.30 மணிமுதல் 7.00 மணிவரை <u>ஹெவன் டி.வி. யிலும்</u>*** நிகழ்ச்சிகளை பாருங்கள், பயனடையுங்கள். கடவுள் இருக்கிறாரா என்ற கேள்விக்கு ஆதாரப்பூர்வமான பதில்களை பல மாதங்களாக தொடர்ந்து எழுதியுள்ளோம். உங்கள் சந்தா காணிக்கைகளுக்கு மிக்க நன்றி.

டி.வி. நிகழ்ச்சியை பார்த்த அநேகர் பரிசுத்த ஆவியை பற்றியும் அந்நிய பாஷைகளை பற்றியும் சந்தேகங்களை எழுப்பினர். அவைகளை யெல்லாம் தீர்த்து வைக்க கர்த்தர் கிருபை பாராட்டினார். பெந்தெகொஸ்தே அல்லாத போதகர்களின் சந்தேகங்களுக்கும் தெளிவு தரவும் சிலர் போனிலேயே ஜெபம் செய்ய பரிசுத்த ஆவியை பெற்றுக் கொண்டதும் கர்த்தருக்கே மகிமையை உண்டாக்குவதாக. தொடர்ந்து ஜெபிக்கிறேன். நீங்களும் ஜெபியுங்கள். **அன்பன் ஜே.செல்லத்துரை**






# தேவ சகவாச அறைகள்

**என்னை இழுத்துக்கொள்ளும், உமக்குப் பின்னே ஓடிவருவோம் ; ராஜா என்னைத் தமது அறைகளில் அழைத்துக் கொண்டுவந்தார் ; நாங்கள் உமக்குள் களிகூர்ந்து மகிழுவோம் ; திராட்சரசத்தைப்பார்க்கிலும் உமது நேசத்தை நினைப்போம் ; உத்தமர்கள் உம்மை நேசிக்கிறார்கள். (உன். 1 : 3)**

உலகத்தில் எத்தனையோ மீடியாக்கள் (தொடர்பு சாதனங்கள்) இருக்கின்றன. புத்தகம், பத்திரிக்கை, டெலிபோன், தொலைக்காட்சி என்பவைகளோடு வலைதளம், இணைதளம் என்றெல்லாம் இன்று ஏராளம் தொடர்பு சாதனங்கள் நமது எல்லைகளைக் குறைத்து உறவுகளை பெலப்படுத்தி ஊக்குவிக்க உதவிகரமாயிருக்கின்றன. இந்த ஊடகங் களெல்லாம் உலகத்தோடு உள்ள உறவுகளை பெலப்படுத்தவே உதவு கின்றன. ஆனால் உன்னதரோடு உள்ள உறவை பெலப்படுத்த வேதத்தி லுள்ள உன்னதப்பாட்டு சில ஊடகங்களை அறிமுகப்படுத்துகிறது. இது படிப்பறிவால் உண்டாகிறதல்ல, பாச அலைகளால் உண்டாவது. பக்தி வினையத்தால் உருவாவது. இது மனிதர்களுக்கு பயித்தியமாய்த் தோன் றும், கர்த்தருக்கோ பிரியமாய் காணும் ; ஆவிக்குரியவைகள் ஜென்ம சுபாவமுள்ள மனிதனுக்கு பயித்தியமாய்த் தோன்றும். ஆனால் அதில் வாழ்பவனுக்கோ பக்தி பரவசமாய்ப் பாயும்.

கனியைத் தேடுவோர், மேலே பார்த்தால் மட்டும் போதாது ; (அதாவது வாழ்க்கையில் மேலான ஆசீர்வாதங்களை வாஞ்சிப்போர்) கீழே இருக்கும் வேரைப் பற்றியும் கவனிக்க வேண்டும். அப்பொழுது தான் ஆசீர்வாதத்தின் இரகசியம் விளங்கும் ? Downward is the root, upwards is the fruit. கீழே வேர் பற்றிய பிறகே மேலே கனிவரும்!

பத்திரிக்கைகளை வாசிப்பவர்கள் கூட்டம் இன்று அதிகம் ; விசுவாசிப்பவர்கள் கூட்டம் குறைவு ; Readers are much but learners are less; நற்செய்திக் கூட்டங்களில் பார்வையாளர்களே அதிகம். ஆனால் 'பங்கு பெறுகிறவர்கள்' குறைவு. கலாத் 2 : 2-ல் பவுல் சுவிசேஷத்தின் இரகசி யத்தை எண்ணிக்கையுள்ளவர்களுக்கே விவரித்துக் காண்பித்தேன் என்கி றார். எல்லோருக்கும் இது விளங்காது. It is public to all, but effects a few.

தேவன் யாவரோடும் பேசுகிறார் ; காதுள்ளவன் கேட்கக்கடவன். கேட்கிறதற்கு காதுள்ளவர்களே கவனிக்கிறார்கள். மற்றவர்கள் கவனிக்கக் கூடாதபடி பிரச்சினைகள் அவர்களை துரத்துகின்றன. ஆகவே கேட்காமல் ஓடுகிறார்கள். அவர்களது பிரச்சினைகளுக்கு தீர்வைத்தான் தேவன் சத்த மிட்டுச் சொல்கிறார் ; ஆனால் அவர்களோ கேட்காமலேயே ஓடுகிறார்கள்; கேட்காதது போலவே ஓடுகிறார்கள் ; காதிருந்தும் கேளாதவர்கள் !

They want to escape from their pressure ; but their pressure drives them to run. நாம் பிரச்சினைகளைக் கண்டு ஓட ஓட, பிரச்சினைகள்

நம்மை விரட்டுகின்றன. பிரச்சினையை எதிர்க்கிற தைரியம் இருந்தால், பிரச்சினையின் 'பெலனை' நாம் கண்டு கொள்வோம். ப்பூ... இதற்குத் தானா இப்படி நான் பயந்தேன் எனத் தோன்றும்.

வாழ்க்கையில் அழுத்தமில்லாத மனுஷன் இல்லை. God breaks before He blesses. தேவன் உடைத்த பின்பே ஆசீர்வதிக்கிறார் ; நான் உடைக்கப்படும் நேரம், நான் உருவாக்கப்படும் நேரம் ! நமது வாழ்க்கையின் அழுத்தங்கள் நம்மை அவரோடு சேரப்பண்ணும் அழைப்புகள் ! நாம் கடந்து போகும் அழுத்தங்களாலேயே நம்மை உருவாக்கும் வேலையை கர்த்தர் செய்து முடிக்கிறார். வேறு வழி இல்லை. அவர் சென்ற பாதை ; அவர் வழி தனி வழி! மனித வழி அல்ல, தேவ வழி ; No other way, No bypass, He is the only way. அவரே வழியும் சத்தியமும் ஜீவனுமா யிருக்கிறார் !

Your life is based on your character ! MY life based on my character. நமது நடக்கைகளே நம் வாழ்வை வனைகின்றன. நமது வாழ்க்கை நமது சுபாவத்தில், குணத்தில்தான் வடிவம் பெறுகின்றன. அநேகரும் பிரச்சினைகள் தீரவே தேவனைத் தேடுகின்றனர். பிரச்சினை தீர்ந்துவிட்டால் தேடுவது குறைகிறது. ஆகவேதான் சிலருக்கு பிரச்சினைகள் தீருவதேஇல்லை.

அவரை ஒரு டாக்டராக மதிப்பது, தேடுவது பெரிய விசுவாசம் தான்; ஆனால் சுகமடைந்தவன் மீண்டும் டாக்டரிடம் போக நாட்டம் கொள்வானா? அதிகமும் டாக்டரிடம் போகாமலிருக்கவே முயற்சிப்பான். நாம் அப்படியல்ல, அவரோடு கூடவே இருக்கும் இணைபிரியா சிநேகிதராகக் கொள்ள வேண்டும்! தேவைகளைக் கேட்கும் எண்ணத்தோடல்ல, சிநேக மனதை வெளிப்படுத்தும் நோக்கத்தோடு ! ஏனோக்கு முந்நூறு வருடம் எதற்காக தேவனோடு உறவாடியிருப்பார் ? உணவு, உடை, உறைவிடத் தேவைக்காகவா? அவை அவருக்கு இல்லாமலா இருந்தது ?

ஏனோக்கும் அவரைத் தேடுவது வழக்கம். தேவனும் ஏனோக்கை தேடுவது உண்டு. இது அனுதின பந்தம். ஆதாமைத் தேடி அனுதினம் வரவில்லையா ? எது குளிர்ச்சியான நேரம் ? A.C. அறையிலிருப்பதா ? தேவ சமூகத்தில் இருப்பதா ? காலையா, மாலையா ? தேவனோடிருக்கிற எல்லா நேரமும் குளிர்ச்சியான நேரம்தான் ! ஆகவேதான் மணவாட்டியை அவர் 'தமது அறைகளுக்கு' அழைத்துக் கொண்டு வந்தார் என்று (உன். 1 : 3-ல்) வாசிக்கிறோம். அவர் அழைத்துச் செல்லும் 'அறைகள்' சில வற்றை நாமும் சிந்தித்தால், நமது சகவாசத்தின் பயனும், பெலனும் சுகவாசமாய் வெளிப்படும்.

## 1. ஒளித்துக் கொள்ளும் அறை (A hiding place)

**என் ஜனமே, நீ போய் உன் அறைகளுக்குள்ளே பிரவேசித்து, உன் கதவுகளைப் பூட்டிக்கொண்டு, சினம் கடந்துபோகுமட்டும் கொஞ்சநேரம் ஒளித்துக் கொள். (ஏசா 26 : 20)**

இனி உன் 'அறைகளுக்குள்ளே' என்பதிலிருந்து இது ஒரு தனி யறை; உள் அறை என்று பொருள்படும் ; நமது உள் அறையில் நமக்கு



இளைப்பாறுதல் உண்டு. தாவீது கர்த்தருக்குள் தன்னை திடப்படுத்திக் கொண்டான்... ஆம் விக்கினங்கள் கடந்துபோகும் மட்டும் நமக்கு திடனைத் தருவது நாம் கர்த்தருக்குள் கொண்டிருக்கும் விசுவாசம் ! அது நம்மை ஆழமான அமைதிக்குள்ளும் தைரியத்துக்குள்ளும் வழிநடத்தும்.

ஏன் இந்த விக்கினம் ? என் சினம் கடந்து போகுமட்டும் என்கிறாரே யார் மேல் சினம்? தேவ பக்தியற்றவர்கள் மேல், அவர் சினம் கொள்ளும் போது, அது நமக்கு பாதிப்பை உண்டாக்காமலிருக்கவே இந்த அறை. தேசத்தில் பஞ்சமிருந்தாலும் எலியாவுக்கு ஆகாரம் உண்டா யிருக்கும் ! அவரது சினம் ஆகாபின் மேல் வந்தது ; தேசம் பஞ்சத்துக் குள்ளானது, ஆனாலும் தேசத்திலுள்ள தேவ பக்தனுக்கு பஞ்சமில்லை. அதுபோல விக்கினங்கள் உலகத்துக்கு வரலாம் நமக்கு இல்லை. அதன் நிழல்தான் நம்மேல்படும்.

நாய் கடிக்கும், நாயின் நிழல் கடிக்காது ; கத்தியின் நிழல் காயப்படுத்தாது ; கத்திதான் காயப்படுத்தும். ஆகவே நாம் பயப்பட வேண்டியதில்லை. நான் கடந்து போகும் பாதை என் தேவன் அறிவாரே! கதவுகளைப் பூட்டிக் கொண்டு... என்கிறபடியால்... அது ஒளித்துக் கொள்ளும் அறைமட்டுமல்ல, it is not only a hiding place but also a hailing place ! High link place !

சூழ்நிலைகள் தற்காலிகமானவை! My circumstances are temporary! என் அழைப்பு நிரந்தரமானது ! My calling is permanent ! அழைப்பை நீ கனம்பண்ணினால், அழைப்பு உன்னை கனம்பண்ணும். உன் சூழ்நிலைகளைக் குறித்து ஏன் முறையிடுகிறாய்? ஏன் வாக்குவாதம் பண்ணுகிறாய்? பரீட்சைக்கு நில்லாதவர்கள், பாடம் கற்றுக் கொள்ள விரும்பாதவர்கள் தான் முறையிடுவர் !

ஆயியில் தோல்வி, எரிகோவில் வெற்றி எடுக்க வைத்தது ! (யோசு 7 : 4) வெற்றியில் நாம் கற்றுக் கொள்கிற பாடத்தை விட, தோல்வியில் கற்றுக் கொள்கிற பாடமே அனுபவபூர்வமானது ! நிரந்தரமானது ! அர்த்த முடையது. நம்மையும் நமது பெலனையும் தெரிந்து வைக்கிறது. நம்மை நமக்கு காட்டுகிறது. நமது காயங்களை கட்டுகிற இடமும் இதுதான். அவர் காயப்படுத்தினாலும் காயம் கட்டுகிறவர். அவர் அடித்தாலும் அனைக்கிறவர் என்பதை அறி(விக்)கிற இடம் ! இப்படிச் சொன்னால் இது நியாயப்பிரமாண போதகம் என்கின்றனர்,

ஊழியனுக்கு பலமுறை தாக்குதல்கள், பலமுனை, தாக்குதல்கள் உண்டு. ஆனால் God diverts in man's darkened periods ! யோபு சொல்கிறார். அவர் அருளின தீபம் என் தலையின் மேலிருந்தது ; அவர் அருளின வெளிச்சத்தில் இருளைக் கடந்து போனேன் (யோபு 29 : 3) என்கிறார். அவர் அருளிய தீபம் உங்கள் தலையின் மேலிருக்கிறதா ? வெளிச்சம் வீசுகிறதா ? சிலருக்கு தீபம் இருக்கிறது. வெளிச்சம் இல்லை...! விளக்கு எரியவில்லை, வெளிச்சம் தரவில்லை என்றால், எண்ணெய் இல்லை என்று பொருள். எரியாத விளக்கை வெளியே வீசி எறிவதைத் தவிர வேறே வழி ? சிலருடைய விளக்கில், திரி எரிகிறது. எண்ணெய் எரியவில்லை ! அதாவது ஆவியால் நடத்தப்படுவோரின் ஊழியத்தில் எண்ணெய் எரியும் ; திரி எரியாது. ஆவியானவரின் கிரியை இருக்கும், இன,

ஜன, பண விஷயங்கள் ஆதிக்கம் பெறாது ; அதுதான் எண்ணெய் (பரிசுத்த ஆவியால் செயல்படுவது) எரிவது! தங்கள் சாமர்த்தியங்கள், சுய விளம்பரம், பண உத்திகள், திரிகளைப் போன்றவை. எண்ணெய் இல்லாமல் திரி எரிந்தால் அது சீக்கிரம் சாம்பலாகி...ஊழியம் முடிவுக்கு வந்துவிடும் ! எண்ணெய் எரியுமானால் திரி இருந்து கொண்டே இருக்கும்; திரியை மாற்ற வேண்டிய அவசியம் இராது. (திரி மாற்றுவது என்றால் வேறே மனிதனை தேவன் தேடுகிறார் என்று பொருள்) ஏலி திரிபோல் எரிந்து போனதால் சாமுவேலை எழுப்ப வேண்டியிருந்தது !

நான் கடந்து போகும் பாதை என் தேவன் அறிவார் ! ஏசா 26:20-ல் கதவுகளைப் பூட்டிக் கொண்டு என் சினம் கடந்து போகுமட்டும் ஒளித்துக்கொள் என்பதால் அது தனியறை மட்டுமல்ல பாதுகாப்பான அறை! A protecting place, a promotional place ! அதில் நான் பாதுகாப்பாய் இருப்பேன். விக்கினங்கள் கடந்து போனபின் நான் ஒரு வித்தியாசமான, (வி)வேகமான பாத்திரமாய் எழும்புவேன்! இதுவே நமது விசுவாசம்!

The time, I spent with the Lord is not spending but investing, நான் <u>செலவழித்த நேரங்கள், சேமித்த நேரங்கள் !</u> அவை எனது ஜெப வங்கியில் இருப்பது எனக்கு எத்தனை பெலன் என்றும் எதைப் பற்றியும் (செலவுகளைப் பற்றி) கவலைப்படமாட்டேன் என்பதும் 'சேமித்தவர்'களுக்குத் தான் (Those who have savings in the bank) தெரியும், புரியும். அது நமது Protection, பாதுகாப்பு ! புரிகிறதா ? இந்த நம்பிக்கையை உண்டுபண்ணவே அவர், தனி அறைக்குள் வழிநடத்துகிறார்.

## 2. <u>விசாரிக்கும் அறை</u> (A room of enquiring)

***கொஞ்ச நேரம் உன்னை ஒளித்துக் கொள். கர்த்தர் அவர்களை விசாரிக்கும்படி, தம்முடைய ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வருவார். (ஏசா 26 : 20, 21)***

ஒரு மனிதனை ஆண்டவர் உடைக்கு முன்னே உருவாக்க முடியாது. உடைத்த பின்பே ஆசீர்வதிக்கிறார், நீ யுத்தம் செய்யாதே. உனக்கு அழுத்தம் உண்டாக்கக் காரணமாயிருந்தவர்களை <u>'விசாரிக்கும்படி'</u> அவர் புறப்பட்டு வருவார். கர்த்தருக்கு காத்திரு ! Be silent ! Expect God to act ! He will do the right thing in the right way into right time. தேவன் செயல்பட இடங்கொடு, பொறுத்திரு ! அவர் உனக்கு தீங்கிழைத்தவர்களையும் தீது பேசினவர்களையும் வெட்கமடையும்படி விசாரிக்க எழுந்திடுவார் ! அவர் விசாரிக்கும்போது அவருக்கு முன் நிற்கத்தக்கவன் யார் ? அவர் நியாயத்தைக் கையில் எடுக்கும்போது தூற்றினவன், பதரைப் போல தூரவிழுவதை நீ காண்பாய்! எந்த ஜனத்துக்கு முன்பாக சிறுமைப்பட்டாயோ அதே ஜனத்துக்கு முன்பாக உயர்த்தப்படுவாய். உன்னை தூற்றியவர்கள் உன் கால் தூசுக்கு சமமாவதை தூற்றுவதைக் கேட்டவர்களே காண்பார்கள். அப்பொழுது உன் நீதி விளங்கும். அவர்கள் இல்பொருளாவார்கள் !

மனிதனுக்கு என் பிரச்சினைகள்தான் தெரியும். ஆனால் தேவனுக்கு என் உணர்வுகளும் புரியும் ! My Lord translates even my tears ! என்



கண்ணீரின் பொருளையும் கர்த்தர் புரிந்திருக்கிறார் ; அர்த்தம் கொள்கிறார். ஆகவே நான் நம்பியிருக்கிறவர் இன்னார் என்று அறிவேன். அதுவே நாம் அவரைப் <u>பற்றிக்</u> கொண்டிருக்கிற தைரியம் ! மோசேயிக்கு விரோதமாய் பேசினவன் (அழைக்கப்பட்ட) ஆரோனாயிருந்தாலும், தேவன் கண்டிப்பார் ! மிரியாமாய் இருந்தாலும் தேவன் தண்டிப்பார் ! அவர்களின் செய்கைக்கேற்ற பலனை அவர்களுக்கு தருவார் !

யோசேப்பு இஸ்ரவேலின் மேய்ப்பனும் கன்மலையுமானவன். அவனைப்பற்றி, தீது சொல்லியவர்களும் அவனைக் குழியில்தள்ள முயன்றவர்களும் அவன் காலிலே விழும் சமயம் வந்தது. அவர்கள் நினைத்திராத உயர்வு, யோசேப்புக்கு வந்தது. யோசேப்பை அடையாளங் காணக்கூடாத அளவு, அவனிடமே வந்து ஆகாரத்திற்கு கையேந்தும் நிலை அவர்களுக்கு நேரிட்டது. ஆயினும் யோசேப்பு அவர்களை தண்டிக்க அல்ல, அவர்கள் மேல் பொழிந்த பாசத்தை, நினைத்து நாம் நெகிழ வேண்டும். தேவன் யோசேப்பை உயர்த்தினார். அல்லேலூயா ! நீ அறைக்குள்ளே இரு. நீ வெளியே வந்து உன்னை வெளிப்படுத்தும் நாளில் கர்த்தர் அவர்களை விசாரிக்கும்படி எழுந்தருள்வார் !

## 3. <u>ஒன்று சேரும் அறை</u> (A room of joining together)

***என்னை இழுத்துக் கொள்ளும் அப்பொழுது உமக்குப் பின்னே ஓடிவருவோம். (உன் 1 : 3)***

To His room where he is அநேக சமயங்களில் அவர் நம்மை இழுத்துக் கொள்ள விரும்புகிறார். அவரது அறைக்கு ! அவரது அறை என்பது நாம் நினைப்பது போன்ற அறை அல்ல. அது எகிப்திலே மோசேக்கு கிடைக்காதது. ஆனால் மீதியான் தேசத்தில் ஆடு மேய்க்கும் போது கிடைத்தது. தேவன் தம்மை வெளிப்படுத்தும் அறை ! தேவனைப் புரிந்து கொள்ளும் அறை ! தேவனோடு சஞ்சரிக்கும் அறை ! ஏனோக்கு போய் வந்த அறை, நோவா எட்டிப் பார்த்த அறை ; ஆபிரகாம் பார்த்த அறை! மோசே பாடம் கற்ற அறை ! தாவீதும் தெரிந்து கொண்ட அறை! பவுல் பிரவேசித்த பக்தர்களின் அறை ! யோவான் வெளிப்படுத்தலை எழுதிய விசேஷித்த அறை ! அது பரிசுத்தரின் அறை ! வானமே கூரையாய் வேயப்பட்ட வண்ண அறை ! பாடம் கற்கும் சுவறில்லா சுற்றறை ! பாட்டும் தாளமும் நாட்டியமாகும் மேலறை ! 'படியாதவர்களும்' படித்துக் கொள்ள 'பண்படுத்தும்' பாடசாலை !

ஜெபம் செய்தல் பெலவீனர்களின் கூப்பாடு அல்ல. பெலன் பெறுவோரின் சாப்பாட்டு அறை! அகாஸ்வேரு ராஜாவின் அரண்மனை விருந்தைவிட அளவற்ற ஐசுவரியம் உள்ள 'தொழுவறை'. மந்தையில் பிறந்தவரின் சிந்தையில் உதித்த மணவறை ! மனதைப் பக்குவப்படுத்தும், குணவறை ! ஆட்டுக்குட்டியானவரின் மறைவு அறை, 'மறை'அறை; ஆத்துமதாகம் தீர்க்கும் 'பாசறை'. ஆகவே ஜெபம் விசுவாசத்தை வளர்க்கிறது ; விசுவாசம் செயல்பட தூண்டுகிறது. செயல், தேவ ராஜ்யத்தைக் கட்டுகிறது. வாரும் என் நேசரே! வயல்வெளியில் போய், கிராமங்களில்

தங்குவோம் (உன் 7 : 11) என்பதன் பொருளை என்றைக்காவது சிந்தித் திருக்கிறீர்களா? சிந்தியுங்கள், சித்திக்கும் ! அது தித்திக்கும் !

உலகத்தில், நமது சகிப்புத் தன்மையை கையாலாகா தன்மை யாக நினைத்துவிடுகின்றனர். Meekness is not weakness ! இயேசுவின் சகிப்புத் தன்மை கையாலாகாத தன்மையல்ல. போதகர் M.K. சாம் சுந் தரம் அவர்கள் ஒருமுறை, கையை, நீட்டுகிறதற்கல்ல, கையைக் கட்டு கிறதற்கே பெலன் வேண்டும் என்றார். அதன் பொருள், உள்ளான பெல னற்றவன் (ஆத்திரப்பட்டு) கையை நீட்டி அடித்துவிடுகிறான் ; அவனுக்கு சரீர பெலன் இருப்பதால் ! அதுவல்ல, கையை கட்டுவதற்கே பெலன் தேவை ! நீங்கள் எதிலே பெலசாலி ? கையை நீட்டவா, கையை கட்டவா ? தேவ சுபாவம் எதிலே விளங்கும்? சிலரின் வாயும் நீளுகிறதை நினைத்தால் அவர்கள் ஆவிக்குரியவர்களா? இல்லை... இரும்பு காந்தத் தோடு ஒட்டியிருந்தாலன்றி, இரும்பில் காந்தம் ஏறாது. ஏறி இருக்கிறதா இல்லையா என்பது கிரியையில் தெரிந்துவிடும்.

உன் 1 : 6-ல் நான் கருப்பாயிருக்கிறேன் என்று பாராதேயுங்கள்! வெய்யில் என்மேல் பட்டது ; ஆகையால் கருத்திருக்கிறேன். நான் கருப்பாயிருந்தாலும் அழகாயிருக்கிறேன் ! இந்த அழகை நீங்கள் சிந்தித் திருக்கிறீர்களா ? T.V.யில் எத்தனையோ அழகு சாதன விளம்பரங்கள் ! வாங்கி உபயோகித்தவர்களுக்குத்தான் அதன் வலிமை தெரியும் ! அதேபோலவே T.V.பிரசங்கியார்களும் பிரசங்கிக்க தொடங்கிவிட்டார்கள். ஏராளம் தீர்க்கதரிசனங்கள் ! Prophetic ministry is a profitable ministry என்று ஒருவர் கூறினார். இலாபம் இல்லாமல் எவரும் வியாபாரம் செய்கிற தில்லை. ஆனால் ஏமாற்றுகிற வியாபாரம் ஒரு நாளில் எல்லோருக்கும் வெட்ட வெளிச்சமாகும்; கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளில் தெரியும் என்பார்கள். இப்பொழுது ஆறு நாளிலேயே அம்பலமாகி விடுகிறது. ஊழியம் அப்படியல்ல ! ஊழியனும் அப்படியல்ல.

A leader is a learner ! A learned person only can teach others. He is the qualified one ! ஒரு ஊழியன், ஒரு தலைவன் ; அவன் எப்போதும் கற்றுக் கொள்ளும் வாஞ்சையுள்ளவன்! அவன் கற்றுக்கொண்டதை போதித்தால் தான் மற்றவர்களை கற்றுக்கொள்ள வைக்க முடியும் ! ஊழியனின் பாரங்களை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. ஊமையன் கண்ட கனவு போல! அவன் உள்ளத்தின் தவிப்பை யார் புரிந்து கொள்வார்? வெளியே சொல்ல முடியாதவை. அழுத்தங்கள் அவனை அறைக்குள் தள்ளுகிறது ! அந்த அறையில்தான் அவன் அழுத்தங்கள் அழுகையாக, கண்ணீராக வடிக்க வைக்கின்றன. வெளிப்படுத்தல் விவேகமாய் வெளிவருகிறது.

லூக் 8 : 37, 38-ல் (பாவியாயிருந்த) ஸ்திரீ ஏன் இயேசுவின் பாதத்தை கண்ணீரால் நனைத்தாள் ? தன் தலைமயிரினால் துடைத்தாள்? தனது விலையேறப்பெற்ற வெள்ளைக்கல் பரணியை வீணாக்கினாள் ? சீமோனுக்கு அது விளங்காது ? அவன் சிந்தைக்கு அது எட்டாது. சீமோன், குஷ்டரோகியாயிருந்து சுகம் பெற்றவன், அதாவது சரீர சுகம் பெற்றவன் ! தான் குஷ்டரோகியாய் இப்போது இல்லை என்பதைக்



காட்டவே, ஊரைக் கூட்டி விருந்து வைத்தான். தன்னை குஷ்டரோகத்தி லிருந்து மீட்டுத் தந்த இயேசுவுக்காக அல்ல, தன்னை விளம்பரப் படுத்தவே விருந்து ! அதற்கு காரணமானவரையே மறந்துவிட்டானே, கவனிக்கவில்லையே !

பதிலாக, அவரின் பாதத்திலிருப்பவளை... பயித்தியக்காரி, பாவி என்று சிந்தித்துக் கொண்டு... இயேசு உண்மையான தீர்க்கதரிசியாயிருந் தால், இவள் யார் என்று தெரிந்திருக்க வேண்டுமே என்று சிந்திக்கிறான். ஐயகோ, தான் பாவம் செய்து கையும் களவுமாய் பிடிபட்டு, கல்லெறியப் படுகிற நேரத்தில் தன்னை காப்பாற்றி, ஜீவன் தந்த கர்த்தரை எப்படி அவளால் மறக்க முடியும் ? எப்படி நன்றி கூறுவது? புரியவில்லை அவளுக்கு ! எனினும் தனக்கு 'விலையேறப் பெற்றதாய்த் தோன்றிய' 'தைலத்தைக் கூட' அவர் காலைக் கழு(வ)வும் தகுதியற்றதென்று கணித்து, கண்ணீரோடு அவர் பாதத்தை கழுவுகிறாள்.

ஆம் ஆத்ம நன்மை பெற்றவர்களுக்கும் (உண்மை இரட்சிப் படைந்தவர்களுக்கும்) சரீர நன்மை பெற்றவர்களுக்கும் இருக்கும் வேறு பாடு இதுதான். அவளின் கண்ணீரின் விலை என்ன என்று இயேசு மட்டுமே அறிவார் ! நான் போகும் பாதை என் நேசர் அறிவார் (யோபு 23 : 10) என்று மட்டுமே ஆவிக்குரியவனால் கூற முடியும் ! நீங்களும் இப்படிப்பட்ட பாதையில் சென்றிருக்கிறீர்களா ?

He called me, catched my hand and brought me into his chambers! (உன் 1 : 3) ராஜா, என்னை தமது அறைகளில் அழைத்து கொண்டு வந்தார்... அல்லேலூயா ! இந்த அனுபவம் உங்களுக்கு உண்டா ? சில இரவுகளில்... அவர் பேசுவது கேட்கிறது ; அழைப்பது கேட்கிறது ; அந்த சத்தம் மீண்டும் கேட்காதா என்று ஏங்க வைக்கிறது. அவரின் வார்த்தை கள், அந்த சொற்களின் உச்சரிப்பில், ஓர் ஆறுதல் ! ஆழமான ஒரு தொடுதல் ! உள் மனதில் இனம் புரியாத ஆனந்த புலகாங்கிதம் ! வீடு மறந்துபோகிறது, தூக்கம் மறந்துபோகிறது. சூழ்நிலை மறந்து போகிறது! அந்த சத்தம், ஆம் அதுவே மீண்டும் மீண்டும் தொனிக்கிறது. இதற்காக எதையும் இழக்கலாம் போல் தோன்றுகிறது ! அவரைப் பார்த்த மாதிரியே இருக்கிறது, கண்களுக்கு தெரியவில்லை, குரலைக் கேட்ட மாதிரியே இருக்கிறது, எங்கிருந்து சத்தம் வந்ததோ புரியவில்லை. ஆனாலும் புரிந்ததுபோல ஒரு வெளிச்சம், தெரிந்தது போல ஒரு தெளிவு. இன்பகர மான ஓர் சந்திப்பு ! துக்கங்கள் எல்லாம் எங்கோ தொலை தூரம் போய்விட்டது. உலகையே அசைத்துவிடலாம் என நினைக்கத் தோன்றும் ஓர் உவப்பு... ஆம் அவரது அறைக்குள் போனால்தானே தெரியும், இவையெல்லாம் புரியும்! சொல்ல முடியாத பாடுகளை சகித்த பக்தர் களை இப்படித்தான் தேற்றினாரோ இந்த நேசர். இத்தகைய அனுபவங் களால்தான் இரத்தம் சிந்தவும் துணிந்தனரோ அந்த இரத்த சாட்சிகள் ? அவர் சமூகம் எத்தனை ஆனந்தம் ! அது எத்தனை வலிமையானது ? நேசம் மரணத்திலும் வலிதே என்பது உண்மை (உன் 8: 6)! இந்த அறைக்குள் மகிழ்பவளே மணவாட்டி ! இவளே நேசரின் பிரியசிநேகிதி ! மறுமனையாட்டிகளைப் பற்றி நாம் ஏன் பேச ?

ஒருமுறை பாஸ்டர் பால் யாங்கி சோவின் அறைக்குள் அவரின் இரண்டாவது குமாரன் (6 வயது) நுழைந்தான். தகப்பன் மடியில் உட்கார்ந்து கொண்டான். பாஸ்டருக்கு செய்தி ஆயத்தப்படுத்துவதில் கவனம். அவனைத் தவிர்க்க வேண்டி, என்னப்பா வேணும் ? கேட்டார். ஒன்றும் வேண்டாம்... சாக்லெட் வேண்டுமா ? டிராயரில் எப்போதும் சாக்லெட் உண்டு ; ஒன்றைக் கொடுத்து அனுப்பிவிடப் பார்த்தார். பையனோ வேண்டாம் என்றான்... பின்னே ??!! அவனை வெளியேற்ற முடியவில்லை. சற்று நேரம் காலை அசைத்துக் கொண்டே மடியில் இருந்தவன் தானாய் இறங்கிக் கொண்டு போய்விட்டான். பையனுக்கு தகப்பன் மடியிலிருப்பது... ஒரு பூரிப்பு, ஒரு பாதுகாப்பு ! ஒரு ஆறுதல் ; இனம்புரியாத தன்னம்பிக்கை ! உறவின் உறுதி ! சரீரமும் ஆத்துமாவும் சங்கமித்த பெலன் ! தகப்பனின் மடியில் இருப்பதின் பொருளை விளக்க குழந்தைக்கு தெரியாது. வார்த்தைகளில் வடிக்க தெரியாது. ஆனால் அதை வாஞ்சிக்கிறது. வந்து உட்கார்ந்து அனுபவிக்கிறது. நீங்கள் எப்படி ? ஜெப அறை கேட்பதற்கல்ல, அனுபவிப்பதற்கு ! தேவைக்கல்ல, உறவுக்கு ! ஆயிரம் ஆயிரம் ரூபாய் கொடுக்க முடியாத ஆறுதலை அளிக்கவல்லது ! அனுபவிப்பவர்களுக்கே புரியும். காதுள்ளவன் கேட்கக்கடவன், புத்தியுள்ளவன் சிந்திக்கக்கடவன். ஆவியுள்ளவன் அனுபவிக்கக்கடவன் ! அல்லேலூயா !

சந்தோஷிக்கும் அறையில், சந்தோஷம் என்பது சம்பவிப்பவைகளால் வருபவை. ஆனால் களிகூறுதலோ ஆவிக்குள்ளானது. Happiness comes according to what happened சந்தோஷம் வெளியே நடப்பவைகளால் வருவது. அதாவது பார்ப்பது, கேட்பது, முகருவது, ருசிப்பது, தொடுவது என புறத்தே இருந்து உள்ளே போவது. ஆனால் களிப்பு அல்லது மகிழ்ச்சி என்பது அகத்தே இருந்து புறத்தே வெளிப்படுவது! அகத்தில் களிகூறுதல் என்பது காணக்கூடிய எந்தப் பொருளையும் (Visible things) சார்ந்ததல்ல. ஆனால் காணப்படாதவைகளைப் புரிந்து கொள்வதால் ஆவியில் உண்டாவது அக்களிப்பு ! அதுவே ஆத்துமாவில் அனுபவிக்கப்படுவது ! உங்களுக்கும் உண்டாக மணவாட்டி பிரார்த்திக்கிறாள் !

## 4. <u>சுத்திகரிப்பின் அறைகள்</u> <u>(Beautiful chamber / Beautifying chamber)</u>

***அவர் என்னை தமது அறைகளில் அழைத்துக் கொண்டு வந்தார். (உன் 1 : 3)***

அப்பொழுது எலியாசீப், தொபியாவுக்கு தேவனுடைய ஆலயப் பிரகாரங்களில் ஒரு அறையை ஆயத்தம் பண்ணினதினால், செய்த பொல்லாப்பை அறிந்து கொண்டேன். அதனால் நான் மிகவும் மனமடிவாகி, தொபியாவின் வீட்டுத்தட்டுமுட்டுகளையெல்லாம் அந்த அறையிலிருந்து வெளியே எறிந்துவிட்டேன். பின்பு நான் அறை வீடுகளை சுத்திகரிக்கச் சொல்லி தேவனுடைய ஆலயப்பணி முட்டுகளையும், காணிக்கைகளையும், சாம்பிராணியையும் அங்கே திரும்ப கொண்டு வந்து வைத்தேன். (நெகே 13 : 7-9)

அவரின் அறைவீடு, சுத்தமான ஒன்று. அங்கே அசுத்தம் காணப்படக்கூடாது. அங்கே தேவையில்லாத ஒருபொருளும் இருக்கவும் கூடாது.



அவருக்குச் சொந்தமல்லாததும் அங்கே இருக்கலாகாது. நமது அறைகளில் அவர் இருக்(ை)க வேண்டுமானால், நாமும் நமது அறையை சுத்திகரித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அறையைச் சுத்தம் பண்ணுகிறதென்றால், நெகேமியாவின் காலத்தில் தொபியா எனப்பட்ட அம்மோனியன் (மோளோகு எனப்பட்ட விக்கிரகத்தை வணங்கியவர்களில் ஒருவன் 1 ராஜா 11 : 7) ஒருவனுக்கு தேவாலய அறைகளை விசாரிக்க வைக்கப்பட்ட எலியாசீப் என்ற ஆசாரியனோடு சம்பந்தங் கலந்திருந்தபடியால், அம்மோனியனாகிய (பத்து தலைமுறைக்கு சபைக்கு உட்படக்கூடாதவனாகிய) தொபியா ஆலய அறையை ஆக்கிரமித்திருந்தான் ; அதனால் நெகேமியா மனமடிவாகி தொபியாவின் வீட்டு தட்டுமுட்டுகளையெல்லாம் அந்த அறையிலிருந்து வெளியேற்றி, அறைவீடுகளை சுத்திகரிக்கச் சொல்லி, தேவனுடைய ஆலய பணிமுட்டுகளையும், காணிக்கைகளையும், சாம்பிராணியையும் அங்கே <u>திரும்ப</u> கொண்டு வந்து வைத்தார். (நெகே 13 : 6-9)

அவருடைய வாசஸ்தலமாகிய நமது சரீரத்தில் அம்மோனியரின் அருவருப்புகள் அரங்கேறிவிடுகிறது உண்டு. தெரிந்தும் தெரியாமலும், இதெல்லாம் ஒரு தவறா என்று நினைத்தே அநேக தட்டுமுட்டுகள் (தேவ பிரசன்னத்தை தடைசெய்யும்) பொருள்கள் நம்மில் இடம் பெற்று விடுவதுண்டு. சில ஊழியர்களே இதற்கு அனுமதி கொடுத்தாற்போல் நவீன உபதேசம் செய்கிறார்கள்! (அந்நாட்களில் பெரிய) ஆசாரியனாயிருந்த எலியா சீப்பே, தொபியாவுக்கு இடமளித்திருக்கின்றபோது (நெகே 13 : 4) அம் மோனியனான தொபியா ஆதிக்கம் கொண்டதில் ஆச்சரியமில்லையல்லவா?

நெகேமியா (Consolation of the Lord தேவனின் ஆறுதல்) சமா தான நகரமான எருசலேமின் அலங்கத்தை கட்டுவதில் மும்முரம் காட்டுகையில் தொபியாவின் தட்டுமுட்டுகளை அகற்றியதோடு, தேவாலய காணிக்கைப் பொருள்கள் வைக்கும் அவ்வறைகளை சுத்தம்பண்ணினான். (காணிக்கையும் சுத்திகரிப்பும் இங்கே இடம் பெறுவதை கவனிக்க வேண்டும்) கர்த்தருக்கு செலுத்தும் காணிக்கை 'மோளோகின்' அறைகளுக்குப் போவதையும், சில சமயங்களில் காணிக்கை வராமற் போவதற்கும் காரணம் என்னவென்று ஊழியர் சிந்திக்க வேண்டும்.

நமது ஜெப அறைகளும் சுத்தமாயிருக்க வேண்டும். வேண்டாத ஆ(சா)பாசங்கள் அகற்றப்பட வேண்டும். ஜெப அறை தேவனோடு சங்கமிக்கும் தூய அறை. அவருக்கு பிரியமற்ற காரியங்கள் நடைபெறவோ, பிரியமற்ற வஸ்துக்கள், பொருள்கள் காணப்படவோ கூடாது. அது தேவ பிரசன்னத்தைத் தடுக்கும்! வேண்டாம் அந்த வேண்டாத குப்பைகள் ! வேண்டாத குப்பைகள் என்பது 'வேண்டிப்'பெறாத - சத்துரு பக்கவாட்டில் நுழைத்த அந்த பொருள்கள் என்று பொருள். அவைகள் ஆத்துமாவுக்கு விரோதமாக போர் செய்யும் தடைச் சாதனங்கள். தூக்கி எரியுங்கள். எவ்வளவு விலை யானாலும் அது வேண்டாம் நமக்கு !

தொபியாவின் பொருள்களை தூக்கி எறிந்தது மட்டுமல்ல காணிக்கை, சாம்பிராணி மற்றும் தேவனுடைய ஆலயப் பொருள்களையும்

உள்ளே கொண்டு வந்து வைத்தேன் என்கிறார் நெகேமியா ! ஆம், பழையன கழிதலும் புதியன புகுதலும் வேண்டும் ! அது வருடக் கடைசி யிலல்ல - தூய்மைப்படுவதற்கு தேதி, நேரம் பார்க்க வேண்டியதில்லை. தேவ பிரசன்னத் தேவையே முக்கியம் ! அறை அழகு பெறுகிறது ! தாழ்மை, தூய்மை பெறுகிறது. கர்த்தரோடிசைந்திருக்கிறவன், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான். நான் சபையைப் பற்றியும் கிறிஸ்துவைப் பற்றி யும் கூறுகிறேன்.

சபை ஏன் வளரவில்லை, சபையில் ஏன் ஆவிக்குரிய கனி இல்லை? காரணம், கிறிஸ்துவோடு இருக்க வேண்டிய ஐக்கியம் குறைவு பட்டதே! மணவறைக் குறைவே சபையை பிள்ளையற்றதாக்குகிறது! புதிய பிறப்புக்கள் வருவதைத் தடைபண்ணுகிறது. ஆவிக்குரிய கர்ப்பத் தடை களை வலிய ஏற்றுக் கொள்ளும் ஊழியர்களைக் கொண்டு சபை எப்படி வளர்ச்சியை சந்திக்க முடியும். கர்ப்பத்தடை சாதனங்களை கையாளும் (ஜெபமற்ற) ஊழியர்களைக் கொண்டு, புதிய ஆத்துமாக்களை எப்படி பிறப்பிக்க முடியும் ? முத்துச் சிப்பியில் ஒரு மழைத்துளி படாமல் முத்து உருவாவது எப்படி ? தேவனிடமிருந்து ஒரு வார்த்தை (செய்தி) கிடைக் காமல் வெறும் சத்தம் எப்படி தேவ சித்தத்தை (பிள்ளை பிறப்பை) உண்டுபண்ண முடியும் ? அந்த வார்த்தை மாம்சமானது போல, மாம்ச மானவர்கள் அந்த வார்த்தையை ஏற்றுக் கொள்ளும்போது தானே புது ஜனனம் உண்டாகும் ? மாம்சத்திற்குரியவன் மாம்சத்தின்படி சிந்திக் கிறான். ஆவிக்குரியவன் ஆவிக்கேற்றபடி சிந்திக்கிறான். நீங்கள் எப்படி ?

அப் 10 : 9-ல் பேதுரு ஜெபம் பண்ணும்படி மேல்வீட்டில் (Upper Room) ஏறினான். ஆம், மேல் வீட்டில் ஏறுகிறவர்களுக்கே பேதுருவுக்கு கிடைத்தது போன்ற தரிசனம் கிடைக்கும். புறஜாதியாரையும் ஆதாயப் படுத்தும் வழிகளைத் தேவன் காட்டுவார். அது நமது விருப்பத்தைப் பொறுத்ததல்ல - தேவனின் இருதயத்திலுள்ள திட்டம் ! The Lord will reveal his plan and ideas ! He gives vision, He motivates his servants. அவர் தமது ஊழியரை ஏவுவதும், தரிசனமளிப்பதும், தேவைகளைக் கொடுப்பதும், தேவ சத்தத்தை தொனிக்கப்பண்ணுவதும், தேவ சித்தத்தை நிறைவேற்று வதும் மேல் வீட்டறையில்தான் (ஆவியில்தான்) உருவாகிறது. மாம்சமான வர்களுக்கு இது விளங்காது. இது மணவாட்டியின் செவிகளுக்குத்தான் கேட்கும். இது என் நேசருடைய சத்தம் என்று (உன் 2 : 8) அவள் தான் அடையாளம் கண்டுகொள்வாள்.

இயேசு **பஸ்காவை** ஆசரிக்க தெரிந்து கொண்டதும் மேல்வீடுதான். சிலருக்கு ஏன் இந்த மேல்வீடு (ஆவியில் நிறைந்திருக்கின்ற அனுபவம்) என்று தெரியாது. புரியாதவர்களுக்கு அப்பம் சாதாரண ரொட்டியாகவும், சாதாரண திராட்சை ரசமாகவும்தான் தெரியும். அதனால் ஆவியில் பெலன் எப்படி உண்டாகும் ? இயேசுவின் சரீரமாக அவர்கள் மாறுவது தான் எப்படி? தேவசாயல் அவர்களுக்குள் வ(ள)ருவதுதான் எப்படி ? பெந்தெகொஸ்தே நாளன்று **மேல்வீட்டறையில்** வந்த ஆவியானவர் மகிமையின் சாயலாக்க இடமளிப்பதே மேல்வீட்டறையின் அனுபவம். உங் களுக்கு உண்டா ? When he shall appear, we shall be like Him. கர்த்தரின்



வருகைக்கு ஆயத்தம் என்பது வெற்று விசுவாசமல்ல, கிரியையிலும் காணப்பட வேண்டிய, காட்டப் பட வேண்டிய அனுபவம். கர்த்தர் தாமே உங்கள் சிந்தையில் வெளிப்படச் செய்வாராக !

நான் என் சீஷரோடு பஸ்காவைப் புசிக்கிறதற்கு 'தகுதியான' இடம் எங்கேயென்று போதகர் கேட்கிறார் (மாற் 14 : 14) என்றால் இடம் எத்தனை அவசியம் என்பதைப் பாருங்கள். தகுதியான இடம், <u>நம்மிடம்</u> உண்டா ? உங்களிடம்தானா ? அது ஒருமுறை பாஸ்டர் ஜெரோம் என்ற தேவ ஊழியர் அம்பத்தூரில் ஒரு விசுவாசியின் வீட்டில் கூட்டங்கள் நடத்திக் கொண்டு வந்தாராம். அவ்வீட்டின் ஒரு பகுதியை விரிவாக்க நினைத்த வீட்டுக்காரர், மரப்பலகைகளை வாங்கி முன் அறையில் போட்டு வைத்திருந்தார். வந்தவர்கள் உட்கார இடம் போதவில்லை. ஆகவே போதகர் பக்கத்து ரூமை திறந்து விடுங்கள், பார்க்க முடியா விட்டாலும் சத்தமாவது கேட்குமே என்று பக்கத்து ரூமை திடீரென்று திறக்க, அங்கே அலங்கோலமாய்ப் பொருட்கள் இருந்தது மாத்திரமல்ல, அலங்கோலமான ஆபாச படங்கள், காலண்டர்கள், நடிகைகளின் (அ)நாகரீக தோற்றங்கள் பிரம்மிப்பை உண்டுபண்ணியது. வெளியே பரலோகச் செய்திகள் பிரசங்கிக்கப்படுகின்றன ! உள்ளே ஆபாசங்கள் அலங்காரம் பெற்றுள்ளன! இது வீட்டுக்காரருக்கு வெட்கத்தை உண்டு பண்ணிவிட்டது. இன்று இப்படி எத்தனையோ அறைகள் ! வீடுகள்! இயேசுவுக்கு வெளிமுற்றம்தானா ? மாடடையும் கூடமே போதுமானது என்று அவர் சொல்லிவிட்டால் என்ன செய்வது ?

இஸ்ரவேலின் இரட்சகரே, நீர் தேசத்தில் பரதேசியை போலும், இராத்தங்க வருகிற வழிப்போக்கனைப் போலும் இருப்பானேன் ? நமது அறையின் அழைப்பே அவரின் பிரசன்னத்தைக் கொண்டுவரும். சில ஆல யங்களில் கூட வெற்று வண்ணக் காகிதங்களையும் கலர் பலூன்களை யும் கட்டி வைத்திருப்பது என்ன அலங்காரம் என்று எனக்கு விளங்கவே இல்லை. பரிசுத்தமானது நித்திய காலமாய் என் ஆலயத்தின் அலங்கார மாயிருக்கிறது என்று இதையா ஆண்டவர் சொல்லி பூரிப்பார்? அவர் மாட்டுக் கொட்டகையில் பிறந்தார் என்பதற்காக அவர் ஆலயம் மாட்டுக் கொட்டகை போலிருக்க வேண்டுமா ? ('ஆ' = பசு, லயம் என்றால் தங்குமிடம் என்று விளங்கிக் கொண்ட தமிழ் வித்வான்களோ இவர்கள் ?) சிந்தியுங்கள்.

அவரது அறை ராஜாவின் அறை Kings chamber, அமெரிக்க ஜனாதிபதி வாசம்பண்ணும் வெள்ளை மாளிகையில் 153 அறைகள் உண்டு. இங்கிலாந்தின் ராணி எலிசபெத் அரண்மனையில் (King Charles palace) 405 அறைகள் உண்டு. உங்கள் இல்லங்களில் அவருக்கு ஓர் அறை உண்டா? உங்கள் உள்ளங்களில் தனி அறை உண்டா ? உங்களோடு மேலறையில் இருக்க விரும்பும் அவரை வரவேற்பீர்களா ? இடம் உண்டா ?

ஜெபம் பரலோகத்தையும் பூலோகத்தையும் இணைக்கிறது (ஆதி 28: 12). ஜெபம் தேவனையே வேலை செய்யத் தூண்டுகிறது. ஜெபம் தேவ தூதர்களையும் வேலை வாங்குகிறது. (அப் 10 : 3-6) ஜெபம்

பரலோக ஆசீர்வாதங்களை பூலோகத்திற்கு கொண்டு வருகிறது. ஜெபம் பூமியின் சத்தத்தை பரலோகத்தில் கேட்கச் செய்கிறது. ஜெபம் தேவ னோடு மனிதனை இணைக்கிறது. ஜெபம் பரலோக வல்லமையை பாமர னும் பெறச் செய்கிறது. ஜெபம் தேவ சத்தத்தை கேட்கச் செய்கிறது. ஜெபம் தேவ சித்தத்தை அறிய வைக்கிறது. ஜெபம் மனிதனை தேவ னோடு சேர்க்கிறது. ஜெபம் தேவ வல்லமையை மனிதனுக்குள் கொண்டு வருகிறது. ஜெபம் வேத வசனத்தை விளங்கிடச் செய்கிறது. ஜெபம் வேதத்தை பிரசங்கிக்கும் வெளிச்சத்தை தருகிறது. ஜெபம் சத்தியத்தை விசுவாசிப்பவர்களுக்கு தேவ சித்தத்தை விளங்கச் செய்கிறது.

ஜெபம் சாத்தானை ஜெயிக்கப்பண்ணுகிறது. ஜெபம் மாம்சத்தை மண்டியிட வைக்கிறது ! ஜெபம் தேவ பெலனை மனிதனுக்குள் ஊற்று கிறது. ஜெபம் பாவியை பரிசுத்த நீதிமானாக்குகிறது. பாதையில் நடத்து கிறது. ஜெபம் தூய்மையைத் தரிக்கும் துயிலை நமக்கு அணிவிக்கிறது. ஜெபம் எளியவனையும் வலியவனாக்குகிறது ; ஜெபம் பொல்லானையும் நல்லானாக்கும், பேதையையும் ஞானியாக்குகிறது. ஜெபம் சாத்தானின் கோட்டையை தகர்க்கிறது. ஜெபம் சத்துருவின் சதிகளை அம்பலப்படுத்து கிறது. ஜெபம் சத்துருக்களுக்கு வெட்கத்தை உடுத்துகிறது. ஜெபம் செய்கிறவர்களுக்கு ஜெயத்தைக் கொடுத்து சமாதானம் அருளுகிறது. ஜெபம் ஆசீர்வாதங்களை அருகில் கொண்டு வருகின்றது ! ஜெபம் ஆவி யில் களிகூறப்பண்ணுகிறது. ஜெபம் ஆனந்த பரவசத்தை அளிக்க வல்லது. ஜெபம் அற்புதங்களைச் செய்(விக்)கிறது. ஜெபம் ஆத்துமாக் களை இரட்சிக்கிறது. ஜெபம் ஆறுதலைத் தருகிறது. இதை நாம் பல விதங்களில் செய்கிறோம். பலவழிகளில் பயனடைய செய்கிறோம். ஜெபமே ஜெயம் ! செய்வோம், ஜெயம் பெறுவோம் ! அல்லேலூயா ! இயேசு வருகிறார்.

## கேள்வி பதில்

**கேள்வி :** விபரம் அறிந்த சில பிரசங்கிமார்களே தசமபாகம் கொடுப்பது பற்றி புதிய ஏற்பாட்டில் போதுமான அளவு சொல்லப்படவில்லை என்கிறார்களே...

**பதில் :** தசமபாகம் / காணிக்கை பற்றி பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற் பாட்டிலும் சொல்லப்பட்டுள்ளதை நிரூபித்து நான் மணவாட்டியில் நீதிமன்ற வழக்காக விவரித்து எழுதியுள்ளேன். ரொம்ப பிரபலமான பிரசங்கிகள் கூட தங்களை விசேஷித்தவர்களாக்கிக் கொள்ள இத்தகைய வாதத்தை முன் வைத்துப் பிரசங்கிக்கிறார்கள். சபை நடத்தும் பாஸ்டர்மார் இந்த தசமபாக வரவைக் குறித்து சரியான கணக்கு வைக்கிறதில்லை என்பது இவர்களின் கணிப்பு. கணக்கு கேட்க வேண்டியவரும் கர்த்தர். கணக்கு கொடுக்க வேண்டியவரும் அழைக்கப்பட்டவர். இதில் மற்றவர் தலையிட வேண்டியதில்லை என்று நானும் இடக்குமுடக்காக பதில் சொல்லாமல், பொதுவாழ்வில் ஊழியர்கள் மக்களின் மனம் நிறைந்தவர்களாக, தேவ ஊழியர்கள் நம்பிக்கைக்கு பாத்திரவான்களாக இருக்க வேண்டியது



அவசியம். ஆகவே முறையான கணக்கு வைத்திருக்க வேண்டும் என்ப தில் கண்டிப்பு உடையவன்.

நிற்க, தசமபாகம் வாங்குவது புதிய ஏற்பாட்டில் தெளிவாக, திட்ட மாக சொல்லப்படவில்லை என்பது இவர்களின் கண்டுபிடிப்பு என்றால், இவர்கள் ஏன் தங்கள் சபை விசுவாசிகளிடம் தசமபாகம் வாங்குகிறார் கள்? தசமபாகம் என்று யாராவது காணிக்கை கொடுத்தால் No, No இது பைபிளிலேயே சொல்லப்படாதது, நான் வாங்கமாட்டேன் என்று சொல்ல வேண்டும் அல்லவா? மட்டுமல்லாது தசமபாகத்தைப் பிரசங்கிக்காத மற்ற சபையாரிடமிருந்து காணிக்கையாக, பெரும் தொகையை இவர்கள் வாங்குவதாலும் மற்ற பெந்தெகொஸ்தே சபைகளிலிருந்து இவர்களுக்கு சொற்ப வருமானமே வருகிறது என்பதாலுமே பெந்தெகொஸ்தே அல்லாத கிறிஸ்தவர்களை பிரியப்படுத்தவே இப்படிப் பிரசங்கிக்கிறார்கள். இவர்கள் விசுவாச பிரசங்கியார்களாம்! வெளிநாட்டிலிருந்து உதவி வாங்கக்கூடாது என்றும் பிரசங்கித்த இவர்களே இப்போது வெளிநாட்டிலிருந்து உதவி பெறுகிறபடியால் நமது மக்களிடம் தசமபாகம் வாங்க வேண்டிய அவசி யம் தற்போது இவர்களுக்கு இல்லை என்பதாலும் இப்போது புதிய வெளிப்பாட்டுடன் இப்படி பிரசங்கிக்கிறார்களாம்.

ஒரு அரசாங்க உத்தியோகஸ்தர், இரட்சிக்கப்பட்டு பரிசுத்த ஆவியைப் பெற்று மிகுந்த ஆர்வமாய் சாட்சி சொல்லி வந்தார். சபை களில் பிரசங்கித்தார். பொது இடங்களில் கூட்டம் போட்டு பிரசங்கித்தார். ஆரம்பத்தில் கவனிக்காத அரசாங்க சிப்பந்திகள் இப்போது இவர் அரசு அதிகாரியாயிருந்து, மதப்பிரச்சாரம் செய்கிறார் என்றார்கள். நான் கிறிஸ் தவனாகிவிட்டேன். ஆகவே கிறிஸ்தவர்களுக்கு பிரசங்கிக்கிறேன் என்று இதுவரை பொதுவாய் பிரசங்கித்தவர், (எதிர்ப்பாளர்களைச் சமாளிக்க) கிறிஸ்தவர்களைத் தாக்கிப் பேசினார். கிறிஸ்தவ ஊழியர்களைத் தாக்கிப் பேசினார். அதிலே ஒன்று தசமபாகம் வாங்குவது. அது மட்டுமல்லாமல், ஆதியிலே விசுவாசிகளுக்கு கட்டடமே கிடையாது. வீடுகள் தோறும் ஆராதித்தார்கள், அதே போல மாற வேண்டும். பெரிய சபை கட்டடங்கள் கட்டுவதால்தானே கிறிஸ்தவம் உலகத்தாரின் கண்களை உறுத்துகிறது. எதிர்ப்பு வருகிறது. தசமபாகம் வாங்க வேண்டியதிருக்கிறது. தசமபாகம் வாங்குவதை நிறுத்தினால், கட்டடமும் வேண்டியதில்லை. புறஜாதி யாருடைய கண்டனத்துக்கும் இலக்காக வேண்டிய அவசியம் இல்லை என்பது இவரது கணிப்பு. ஆகவே தசமபாகம் வேதத்திலே சொல்லப்பட வில்லை என்றும் பிரசங்கிக்கிறார். தனக்கு நேரிட்ட எதிர்ப்பை (Dilute பண்ண) சமாளிக்க இந்த மாதிரி (?!) உபதேசத்தை அவிழ்த்து விட்டு விட்டார். இவரைப் பொறுத்தவரை ஆதி விசுவாசம் உடையவராம். இவர் ஜெபம் பண்ணி அநேகர் சொஸ்தமடைந்து விட்டனராம். ஆகவே இவர் தான் ஆதி அப்போஸ்தலரைப் போல அற்புத அடையாளங்களுடன் ஊழி யம் செய்கிறாராம். (ஒரு கேள்வி : அப்போஸ்தலர்கள் எல்லாவற்றையும் விட்டு இயேசுவைப் பின்பற்றினார்களே அதுபற்றி எதாவது இவர் சொல்ல முடியுமா என்று யாரும் இதுவரை கேட்கவில்லையாம். ஆகவே தன் வேலையிலிருந்து கொண்டே வேலையைக் காட்டுகிறார்)

எபி 10 : 34-ல் பரலோகத்தில் அதிக மேன்மையும் நிலையுள்ளது மான சுதந்திரம் உங்களுக்கு உண்டென்று அறிந்து, உங்கள் ஆஸ்தி களையும் சந்தோஷமாய் கொள்ளையிடக் கொடுத்தீர்கள் என்று பவுல் எபிரெயருக்கு எழுதியதைக் கூறி ஆரம்ப காலத்தில் தாராளமாக ஜனங்கள் கொடுக்க வேண்டுமென்று உற்சாகப்படுத்தி ஜனங்களிடமிருந்து காணிக்கை பெற்ற சில நபர்கள்தான் இன்று தசமபாகம் பழைய ஏற்பாட்டு சத்தியம் அது புதிய ஏற்பாட்டிலே சொல்லப்படவில்லை என்று பிதற்று கிறார்கள். கடவுள் பெயரில் நடைபெறுகிற அநியாயங்களைப் பொறுக்க மாட்டாமல்தான் ஈ.வெ.ரா பெரியார் கடவுளே இல்லை என்று சொல்லத் துணிந்தார். ஏனெனில் இந்தியாவிலுள்ள மத சம்பிரதாயங்களும், சாமியார் கள் செய்யும் லீலைகளையும் பொதுவாக கண்டிக்கவே - இந்து மதத்தை மட்டும் கண்டிக்கிறதாக யாரும் நினைத்துவிடக்கூடாது என்று பொது வாகவே கடவுள் இல்லை என்றாரே. அதுபோல சில பாஸ்டர்கள், ஊழி யர்கள் செய்யும் தவறுகளைக் கண்டிக்க பெரியார் வழியை பின்பற்றுவது எத்தகைய தவறு என்பதை இவர்களும் அறியாமலே செய்கிறார்கள்.

மட்டுமல்லாமல், பொருளாதார ஆசீர்வாதமானது மனிதனுக்கு தேவை என்பதை அறிந்த ஆண்டவர் உலகத்தில் தாயின் வயிற்றிலிருந்து பிறந்த முதலாவது மனிதனிலிருந்தே கர்த்தருக்கு காணிக்கை கொடுக்க வேண்டும் என்று மனிதனுடைய மனச்சாட்சியிலேயே ஒரு பிரமாணத்தை வைத்தார். தசமபாகம் பற்றிய சத்தியம் நியாயப்பிரமாணத்தில் இடம் பெறு முன்னமே ஆபிரகாம் முதல் அனைத்து கோத்திரப் பிதாக்களும் தசம பாகம் செலுத்தி வந்துள்ளனர். நியாயப்பிரமாணம் வந்தபோதும் தேவன் அதை பிரமாணமாக்கினார். இது தேவன் மனிதனின் மனதிலே வைத்த பிரமாணமேயல்லாமல் நியாயப்பிரமாணமோ, கிருபைப் பிரமாணமோ வரு முன்னமே பக்தர்களுக்குள்ளிருந்த மனதின் பிரமாணம் என்பதை மறக்க வும் கூடாது, மறுக்கவும் கூடாது. இஸ்ரவேலர் இதை பழைய ஏற்பாட்டில் மட்டுமல்ல புதிய ஏற்பாட்டிலும் ஆசீர்வாதம் வேண்டும் என்று சிந்திக்கிற, விரும்புகிற ஒவ்வொருவரின் இருதயத்திலும் அதை பிரமாணமாக வைத்து விட்டார். ஆகவே அதுபற்றி புதிய ஏற்பாட்டில் தனித்து எழுத வேண்டியது தேவையில்லாமல் இருந்தது. எப்படி நியாயப்பிரமாணம் வருமுன்னமே ஆண்டவருடைய ஆசீர்வாதம் தேவைப்படும் ஒவ்வொரு மனுஷனும் ஆண்டவரைப் பங்காளி ஆக்கிக் கொள்ள வேண்டும். தசமபாகம் கொடுக்காதவர்களுக்கு இதன் பொருள் விளங்காது என்பதால் அவன் தசமபாகம் கொடுத்தே அதை உறுதிப்படுத்தி கொள்கிறவனாயிருக்கிறான்.

புதிய ஏற்பாட்டிலும் சபை முதலில் இஸ்ரவேலர்களுக்குள்ளேயே ஆரம்பிக்கப்பட்டபடியால் இது மனதின் பிரமாணமாகவே இருந்தது. சபை யின் ஆரம்ப காலத்தில் தாராளமாக ஜனங்கள் கொடுக்க வேண்டுமென்று அப்போஸ்தலர்கள் உற்சாகப்படுத்தி பேசினர். ஜனங்களிடமிருந்து காணிக்கை பெற்றனர். விசுவாசிகள் தங்கள் ஆஸ்திகளையும் விற்று அதன் கிரயத்தைக் கொண்டு வந்து அப்போஸ்தலர் பாதங்களில் வைத் தார்கள். அவனவனுக்கு தேவையானதற்குத் தக்கதாய் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்த தில்லை என்று அப். 4 : 34, 35ல் வாசிக்கிறோம். ஆயினும் இவை



அப்போஸ்தலர்களால் உபதேசிக்கப்படாமல் இஸ்ரவேலருக்குள் விளங்கிய (தசமபாக அளவோடு நிறுத்திக் கொண்டார்கள். மேலும் அப்போது சபை ஆரம்ப நிலையில் இருந்ததாலும் அதன் நடத்திப்புகள் அதாவது 5 வித மான ஊழியங்களோ ஆளுகைகளோ, வரங்களோ, பாஷைகளோ, சபை கட்டடங்களோ, இசைக் கருவிகளோ, மைக்செட் வசதிகளோ தேவைப் படும் என்றெல்லாம் அவர்கள் எதிர்பார்க்கவில்லை. ஆகவே விதவைகள் போஷிக்கப்பட வேண்டும். ஏழைகள் பராமரிக்கப்பட வேண்டும் என்பதும், இயேசு சீக்கிரம் வந்து விடுவார் என்பதுமே அவர்களின் எதிர்பார்ப்பா யிருந்ததாலும் இஸ்ரவேலரிலிருந்து இரட்சிக்கப்பட்டவர்கள் முன்னே கொடுத்து வந்த தசமபாகம் செலுத்துவதே போதுமென்று விட்டுவிட்டனர். அதன்படி தசமபாகம் செலுத்துவதே போதும் என்றதால் இதுவே சபையின் பிரமாணமாக மாறியது. ஏனெனில் பொருளாதார ஆசீர்வாதம் என்பது மனிதன் உலகத்தில் உண்டான காலம் முதல் தேவையாயுமிருந்தது. ஆண்டவரே அதைப் பூர்த்தி செய்கிறவராயுமிருந்து வந்திருக்கிறார்.

இன்று சில போதகர்களின் முன்னேற்றமும் அவர்களின் பிள்ளை களின் டாம்பீக தோற்றங்களும் சிலர் மனதை பாதிப்பதால் வெறுப் படைந்து அவர்களின் செய்கைக்கு காரணம், இவர்கள் தசமபாகம் வாங்குவதுதான் என்று எண்ணி அதற்கு எதிராக பிரசங்கிக்கிறார்கள். இப்படி பிரசங்கிப்பதால் (எதிர் கட்சிகளுக்கு ஆளும் கட்சி செய்கிற எல்லாவற்றையும் குறைகூறுகிற ஆவி இருப்பதுபோல) சில நொந்து போன பிரசங்கிகளுக்கு வேறு காரியங்கள் விளங்காதபடியால் (?!) தசம பாகம் வாங்குவதைப் பற்றி எதிர்த்துப் பிரசங்கிக்கிறார்கள். தேவன் மனி தனை உண்டுபண்ணி ஏதேனில் வைத்தபொழுது, தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் நீ புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை (மட்டும்) புசிக்க வேண்டாம். நீ அதைப் புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார். **எதை வேண்டுமானாலும் புசிக்கச் சொன்னவர், எதையெதையெல்லாம் புசிக்கலாம் என்று சொல்லாததுபோல** கொடுப்பதற்கும்... எல்லாவற்றிலும் தசமபாகம் மட்டு மல்ல, பொருத்தனை, மற்றும் இஷ்டகாணிக்கை, விசேஷித்த காணிக்கை, சிறப்பு காணிக்கை, கட்டட நிதி காணிக்கை, ஏழைகள் உபகார காணிக்கை என்று சபை வளரவும், எளியவர்களின் தேவைகள் சந்திக்கப் படவும் அவனவன் தனக்கானவைகளை மாத்திரமல்ல பிறருக்கானவை களையும் நோக்குவானாக என்று எழுதியிருப்பதுபோல பெந்தெகொஸ்தே சபை வளரவும் அதன் ஊழிய தேவைகள் சந்திக்கப்படவும் தேவனே விசுவாசிகளைக் கொடுக்கச் செய்த ஏற்பாடு இது. இதற்கு எதிராக பிரசங் கிப்பவர்கள் தேவ சித்தத்துக்கு எதிராக பிரசங்கிக்கிறார்கள். இவர்கள் தங்களை பிரஸ்தாபித்துக் கொள்ளும் நூதன ஆதாயம் தேடிகள்!.

மாம்பழம் சாப்பிடுகிற மனிதன், மாம்பழத்தை சாப்பிட்டுவிட்டு கொட்டையை விதைக்கிறவனாயிருந்தால்தான் - அது மீண்டும் கனி கொடுக்க முடியும். ஊனை சாப்பிட வேண்டாம் என்று (தசமபாகத்தில் 9 பங்கை சாப்பிட்டுவிட்டு கொட்டை போன்ற ஒரு பங்கை விதைக்க வேண் டும், அல்லது ஆண்டவருக்கு கொடுக்க வேண்டும். ஆண்டவர் எவ்வளவு கிருபையுள்ளவராயிருந்தாலும் விதைக்காமலே பலன் கொடுக்கிறவர்

அல்ல. ஈசாக்கு விதைவிதைக்காமல் அவனுக்கு 100 மடங்கு விளைய வில்லை என்பதை மனதில் கொள்ளுங்கள். ஒரு டீச்சர் 30 ஆயிரம் ரூபாய் மாத சம்பளம் வாங்குகிறார்கள் என்றால், 3000 ரூபாய் தசமபாகம் செலுத்த வேண்டும். இந்த 3000 ரூபாயும் அவர்கள மாதத்தில் 4 ஞாயிற்றுக் கிழமைகளில் வேலை செய்யாமலே அவர்களுக்குக் கிடைத்த சம்பளம். அதாவது 4000 ரூபாய் அவர்களுக்கு தேவன் தந்த இலவச வருமானம். இதில் 3000 ரூபாய் தசமபாகமாக கர்த்தருக்குக் கொடுப்பதில் என்ன கஷ்டம்? இதை தவறு என்று இந்த பிரசங்கிமார்கள் பிரசங்கிக்கிற தில் என்ன நியாயம் இருக்கிறது என்று தெரியவில்லை.

கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும். அமுக்கி குலுக்கி, சரிந்து விழும்படி உங்கள் மடியிலே அளந்து போடு வார்கள் என்று ஆண்டவர் சொன்னபடி ஆசீர்வதிக்கப்பட வேண்டுமானால் காணிக்கை கொடுக்க வேண்டும். இது விதை தானியம் போன்றது. இங்கே தசமபாகம் என்ற வார்த்தையே இல்லை என்பதே அநேகருடைய கேள்வி. மக்கதோனியா நாட்டு <u>சபைகளுக்கு</u> தேவன் அளித்த கிரு பையைப் பற்றி பவுல் எழுதும் போது (2 கொரி 8 : 1-4) அவர்கள் மிகுந்த உபத்திரவத்திலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரத்திலும், உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள் என்றும். அவர்கள் தங்கள் திராணிக் கும் (தசமபாகத்துக்கும்) மிஞ்சி - மேலாக கொடுக்கவும் மனதுள்ளவர் களாயிருந்தார்கள் எனவும் கூறுகிறார். இயேசுவும் இஸ்ரவேலர் இயல் பாய்க் <u>கொடுக்கும்</u> படியான அளவு : தசமபாகம்தான் என்பதைக் காண் பிக்கும் வகையில் நீங்கள் ஒற்தலாமிலும், வெந்தயத்திலும், சீரகத்திலும் (அற்பமான தானியங்களில் கூட) <u>தசமபாகம் செலுத்தி</u> நியாயப்பிரமாணத் தில் கற்பித்திருக்கிற நீதி, இரக்கம், விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்களே, இவைகளையும் செய்ய வேண்டும். அவைகளையம் விடாதிருக்க வேண் டும். (மத் 23 : 23) என்றவர் பழைய ஏற்பாட்டின் நியாயப்பிரமாணத்தின் படி <u>தசமபாகம் செலுத்துவதையும் விடாதிருக்க வேண்டும் என்று கூறியுள் ளதை மறக்கக்கூடாது</u>. ஆகையால்தான் அவர் சொன்ன உவமை சம்ப வத்தில் பரிசேயன் தன்னை நீதிமான் என்று காண்பிக்கிற விஷயத்தில் வாரத்தில் இரண்டு தரம் நான் உபவாசம் செய்கிறேன். <u>என் சம்பாத்தி யத்திலெல்லாம்</u> தசமபாகம் செலுத்தி வருகிறேன் என்கிறான் (லூக் 18 : 12) என்பதை இஸ்ரவேலரின் கடமையாக இருந்து வந்திருக்கிறது என் பதைக் கூறுவதோடு புதிய ஏற்பாட்டு சபை தசமபாகம் காணிக்கை செலுத்துவதை ஒரு கடமையாக (கடனாக) எண்ணாமல், அதைப் பற்றி பெருமை பாராட்டாமல் (இது எல்லோரும் செய்யக் கூடியது தானே என்று எண்ணி) தேவ நீதியை விசுவாசிக்க வேண்டும். அதாவது சுயகிரியையின் மேல் சாராமல் தேவ கிருபையின் மேல் சார்ந்திருக்க வேண்டும் என்பதை சொல்ல வருகிற இயேசுவானவர், இயல்பாகவே தசமபாகம் கொடுப்பது அன்றைய பக்தர்களின் செய்கையாயிருந்து வந்தது என்பதை வெளிப்படுத்துகிறார். அதாவது ஒரு தாய் தன் குழந்தைக்கு பால் கொடுப்பதையோ அதை தூக்கி வைத்து சுமப்பதையோ, அதைக் குளிப்பாட்டி சுத்தம் பண்ணுவதையோ ஒரு செய்கை அல்லது சாதனை என்று கருதாமல் அது <u>இயல்பு</u> என்பது போலவே லூக் 18 : 12-ல்



இயேவின் வார்த்தைகள் தசமபாகம் கொடுப்பதும் இயல்பானது என்கிறார். இதையெல்லாம் புரிந்து கொள்ளாத சில நூதன பிரசங்கிமார்... தாங்கள் சாதுரிய பேச்சு எல்லோரையும் கவரும் என்று தப்புக் கணக்குப் போடுவது தேவனுக்கு விரோதமான பகை என்பதையோ, தேவனுக்கு அல்லது தேவ வார்த்தைக்கு எதிராக பிரசங்கிக்கிறோம் என்கிற அபாயத்தையோ அறியாமலே பேசி விடுகின்றனர்.

கடந்த கி.பி. 52 முதல் 1950 ஆண்டுவரை இந்தியாவில் கிறிஸ்த வம் வளர்ந்ததை விட 1950-க்கு பிறகு 2010 வரை வளர்ந்துள்ள கிறிஸ்த வம் பன்மடங்காகும். இதற்கு காரணம் பெந்தெகொஸ்தே திருச்சபைகள் தான் என்று பெந்தெகொஸ்தே அல்லாத ஸ்தாபனம் கணக்கெடுத்துள்ளது. இந்த வளர்ச்சி பெந்தெகொஸ்தே சபைகளின் சுவிசேஷ பிரபல்ய முயற்சி. அதனால்தான் ஆரம்பகால சபையார் (ஆதி சபையார்) தங்கள் வீடுகள், நிலங்களை உடையவர்கள் அவைகளை விற்று, அவைகளின் கிர யத்தைக் கொண்டு வந்து அப்போஸ்தலரின் பாதங்களில் வைத்தார்கள். (எனினும் அது தசமபாக சத்தியமாகாது என்பதால் அதை மாற்றி தசம பாகம் தருவது பற்றி இஸ்ரவேலர் சபைக்கு இயல்பானதாகவே இருந்த படியால் அதை எழுதி உணர்த்த வேண்டிய தேவை புதிய ஏற்பாட்டு சபைக்கு இல்லாமல் இருந்தது) வேத வசனம் வளர்ந்து பெருகியது. திர ளான ஜனங்கள் இரட்சிக்கப்பட்டு அனுதினமும் சபையில் சேர்ந்து வந் தார்கள். அதுபோல தசமபாகத்தைப் பிரசங்கிக்கிற சபைகளின் வளர்ச்சி துரிதமடைய ஆதரவாய் இருப்பதை விட்டுவிட்டு, இதற்கு விரோதமாகவும் இதைத் தடுக்கவும், சுணங்கப்பண்ணவும் எவர் பிரசங்கித்தாலும் அவர்கள் முள்ளிலே உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்ற வார்த்தைகளின் பொருளை உணராதவர்கள். விதைக்கிற இடத்தில் அறுக்கிற (?!!) இவர் கள் கண்களையும் தேவன் தாமே திறந்தருள்வாராக!

## <u>வாலிப வாலிபிகளின் கேள்விகள்</u>

**கேள்வி 1**: அனைத்து காரியங்களிலும் மற்ற நாடுகளை பின்பற்ற உற்சாகப்படுத்தும் நமது நாட்டார் திருமண விஷயத்தில் மட்டும் வெளி நாட்டினரை பின்பற்ற கூடாதென தடைபோடுகிறது ஏன் ?

**பதில்** : நமது நாட்டில் இன்னும் பெண்களை பற்றிய விழிப்புணர்வு தேவைப்படுகிறது. ஆண், பெண் என்கிற வித்தியாசம் கருவிலேயே உணரப்படுகிறது. பெண் சிசுக்கள் கருவிலேயே அழிக்கப்படுவதை நினைக்கையில் பெண்களை பற்றிய விழிப்புணர்வு நமது நாட்டு மக்க ளுக்கு இன்னும் தேவைப்படுகிறது. ஆணுக்கு நிகரான உரிமைகள் பெண் களுக்கு எப்பொழுது கிடைக்கிறதோ, டௌரி கொடுத்தால்தான் திருமணம் நடக்கும் என்கிற நிர்பந்தம் எப்பொழுது மாறுகிறதோ, ஆண்களுக்கு நிகராக பெண்களும் பாதுகாப்புடன் இரவிலும் தெருக்களில் எப்போது நட மாட முடிகிறதோ அப்பொழுதுதான் நமது நாட்டில் நீங்கள் எதிர்பார்க்கும் உரிமைகளை அடைய முடியும். அதற்கு இன்னும் பல தலைமுறைகள் பிடிக்கும் என்று நான் நம்புகிறேன். நாட்டு மக்கள் மத்தியில் மட்டு

மல்லாமல் கிறிஸ்தவத்திற்குள்ளேயே இத்தகைய குறைபாடுகள் இருப்ப தால்தான் கால தாமதம் ஆகும் என்று கூறுகிறேன்.

மட்டுமல்லாமல் கர்த்தரை அறிகிற அறிவினால், சூழ்நிலைகளை யும், கலாச்சாரங்களையும் ஜெயங்கொள்ளும் பெண்கள் நிச்சயமாக தாங் கள் விரும்பும் அல்லது எதிர்பார்க்கும் வரன்களை தேர்ந்தெடுப்பதில் பிரச் சினை இராது என்று நம்புகிறேன்.

**கேள்வி 2** : நீங்கள் சொல்வதை பார்த்தால் காதல் திருமணம் அல்லது ஒரு பெண் தனது கணவனை தேர்ந்தெடுக்கும் உரிமை ஒரு பெண்ணுக்கு கிடையாது என்கிறீர்களா ?

**பதில்** : நான் அப்படி சொல்லவில்லை. இதில் பெண்களின் உரிமைகள் பாதிக்கப்படுவதாய் இருப்பதால் நான் வேதாகமம் சார்ந்த ஆலோ சனையை உங்களுக்கு பரிந்துரை செய்யவே கூறுகிறேன். வாலிபர்கள் கன்னியர்கள் ஒருவருடன் ஒருவர் பழகித்தான் தங்கள் துணைகளை தெரிந்தெடுக்க வேண்டும் என்று நினைப்பது வெளிநாட்டு பாணி. அது நமது பண்பாட்டுக்கும் இயல்பு வாழ்க்கைக்கும் பொருந்தி வராததினாலும் வேதமும் அதை பூரணமாய் அங்கீகரிக்காததாலும் கூறுகிறேன். கர்த்தர் மேல் வைக்கும் ஆழமான பக்தி உங்களுக்கு சரியான வாழ்க்கை துணையை தெரிந்து கொள்ள உதவி செய்யும்.

எனக்கு தெரிந்து தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா போன்ற இடங் களில் பரவியிருக்கும் ஒரு திருச்சபையில் ***ஊழியர்கள்தான் தங்கள் விசுவாசி களின் பெண்களுக்கும், ஆண்களுக்கும் துணைகளை தேர்ந்தெடுத்து தருகிறார்கள். நிச்சயத்தார்த்தம் நடக்கும்வரை மாப்பிள்ளை பெண்ணையும், பெண், மாப்பிள்ளை யையும் பார்த்திருக்கவே மாட்டார்கள். விபரங்கள் மட்டுமே சொல்லப்படும். ஊழியர்களின் நடத்திப்பின்படி (அவர்களின் தெரிந்தெடுப்பு சரியாய் இருக்கிறதை நானும் கண்டிருக்கிறேன்) திருமணங்கள் நடத்தி வைக்கப்படுகின்றன. 100-க்கு 90 சதவீதம் வெற்றிகரமாக குடும்ப வாழ்க்கை நடப்பதை அனுபவப் பூர்வமாக கண்டு வருகிறேன்.*** பரிசுத்தாவியை அவர்கள் விசுவாசிக்கிறேன் என்றாலும் அந் நிய பாஷை பேசாத கிறிஸ்தவ சபையார் நடத்தி வைக்கும் திருமணங் களே வெற்றிகரமாய் நடந்துவர, ஆவியின் அபிஷேகம் பெற்ற தேவ பிள்ளைகளுக்கு ஏன் அந்த விசுவாசம் இருக்கக்கூடாது ? ஏன் கர்த்தர் மேல் பாரத்தை போட்டு தேவன் காட்டுகிற வரண்களை ஏற்றுக் கொள்ளக்கூடாது ? A to Z பொருத்தம் பார்த்து (A for Age, B for Beauty, C for Caste, D for Dowry, E for Education, etc….etc…) திருமணம் செய்த எத்தனையோ குடும்பங்கள் பிரிந்திருப்பதை நான் கடந்த 40 ஆண்டு கால ஊழியத்தில் கண்ணார கண்டு வருகிறேன். அவர்கள் சமாதானத் திற்கான வழிகளையும் கூறி வருகிறேன்.

ரெபேக்காள், ஈசாக்கை பார்த்ததும் கிடையாது (No Photos, No Biodatas), பேசியதும் கிடையாது. அவன் பெற்றோரையும் பார்த்தது கிடை யாது. ஆயினும் எலியேசர் சொன்னவைகளை விசுவாசித்து அவரோடு கூடவே போய் ஈசாக்கை மணந்து கொள்கிறாள். அதேபோல எலியேசர்



சொன்ன விபரங்களை நம்பி தன்னை, தன் வாழ்வை அர்ப்பணித்ததோடு தனது குடும்பம், உற்றார், ஊரார் எல்லாவற்றையும் விட்டுவிட்டு புறப்பட்டு வந்தாளே, அந்த விசுவாசம் ஏன் அபிஷேகம் பெற்ற தற்கால கன்னியர் களுக்கு இருக்கக்கூடாது ? (நான் மாப்பிள்ளையை பார்க்கக்கூடாது, பயோடேட்டா கேட்கக்கூடாது என்று சொல்லவில்லை) ஈசாக்கும் ரெபேக் காளை பார்த்ததும் இல்லை. விபரங்கள் கூட முன்னமே சொல்லப்படவு மில்லை. எலியேசர் : இதுவே உன் மணவாட்டி என்று அறிமுகப்படுத்த, அகமகிழ்வுடன் ஏற்றுக் கொண்டாரே. அது எப்படி ? சிந்தித்திருக்கிறீர் களா? ஈசாக்கை போல மாலை நேரங்களை தியானத்தில் செலவிடும் வாலிபர்களுக்கே இத்தகைய தரிசனம் வரும். இன்றைய வாலிபர்கள் தங்கள் மாலை நேரங்களை எப்படி செலவு செய்கிறார்கள் என்று சிந்தித்து பார்த்து சீர்பொருந்துங்கள் என்று கிறிஸ்துவினிமித்தம் வேண்டிக் கொள்கிறேன்.

திருமணம் ஒவ்வொரு வாலிபர், கன்னியர்களின் வாழ்க்கையில் திருப்பத்தை உண்டுபண்ணும் நிகழ்வு. அவர்களின் எதிர்காலம் திரு மணத்தை மையமாய் கொண்டே அமைகிறது. ஆகவே இது சரியாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டியது, தீர்மானிக்க வேண்டியது அவசியமாகிறது. வேதம் வழிநடத்த ஆவியானவர் துணை செய்ய, பெற்றோர் அல்லது சபையார் அங்கீகாரத்தோடு செய்யப்படும் திருமணங்கள் ஒருபோதும் தோல்வியடைகிறதில்லை. தம்பதியர் மாம்சீகமாக செயல்படாமல் தன்னை அர்ப்பணித்து ஆவிக்குரிய ஜீவியம் செய்ய தீர்மானிப்பார்களெனில் நிச்சயம் தேவ ஆசீர்வாதம் உண்டு. என்னை கனப்படுத்துகிறவனை நானும் கனப் படுத்துவேன் என்று கர்த்தரும் சொல்லியிருக்கிறாரே. பொய்யுரையாத அந்த தேவன் சொன்ன வார்த்தைகளை சிந்தியுங்கள். நான் சொல்வதின் பொருளை புரிந்து கொண்டு செயல்படுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

## <u>ஜூன் மாதக் கேள்விகளுக்கான விடைகள்</u>

1. ***கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள்*** தேவனுடைய பிரகாரங் களில் செழித்திருப்பார்கள். ***நீதிமான் பனையைப் போல் செழித்து, லீபனோ னிலுள்ள கேதுருவைப்போல்*** வளருவார்கள். ***(சங் 92 : 13, 12)***
2. ஒரே வார்த்தை வசனத்தின் கடைசியில் இருமுறை வந்து முடியும் வசனம் - ***ஆமேன், ஆமேன் (சங் 89 : 52)***
3. துயரப்படுகிறவன் துக்கத்தில் மூழ்கி கர்த்தரிடத்தில் தன் வியா குலத்தைத் தெரிவித்து செய்யும் விண்ணப்பமாகிய சங்கீதம் - ***சங்கீதம் 102-ன் தலைப்பில் உள்ளது.***
4. ***கர்த்தாவே உமது சத்துருக்கள்*** அழிவார்கள், ***சகல அக்கிரமக்காரரும்*** சித றுண்டு போவார்கள். ***(சங் 92 : 9)***
5. தொடங்கிய வார்த்தையிலே முடிவடையும் அதிகாரங்கள் - ***அல்லே லூயா என்று தொடங்கி அல்லேலூயா என்று முடிவடைந்துள்ளது. (சங் 113, 135, 146, 148, 149, 150-ம் அதிகாரங்கள்)***

6. ஒரே வசனம் தொடக்கத்திலும், முடிவிலும் வரக்கூடிய அதிகாரம் - **118-ம் அதிகாரம் (கர்த்தரைத் துதியுங்கள் அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது)**
7. **வைராக்கியமும், விரோதமும் எங்கே உண்டோ அங்கே** கலகமும் சகல துர்ச்செய்கைகளுமுண்டு என்று வாசிக்கிறோம். **(யாக் 3 : 16)**
8. **பரிசுத்தமானது நித்திய நாளாக உமது** ஆலயத்தின் அலங்காரமாயிருக்கிறது **(சங் 93 : 5). எகிப்தியர் பயந்ததினால் இஸ்ரவேலர் புறப்பட்டபோது மகிழ்ந்தார்கள். (சங் 105 : 38)**
9. **வானத்திலிருந்து நியாயத்தீர்ப்புக் கேட்கப்பண்ணினீர்** பூமி பயந்து அமர்ந்தது என்று வாசிக்கிறோம். **(சங் 76 : 9)**
10. ஒன்றை ஒன்று சந்திப்பது - **கிருபையும், சத்தியமும்.** முத்தஞ் செய்வது **நீதியும் சமாதானமும். (சங் 85 : 10)**
11. **பினெகாஸ்** எழுந்து நின்று நியாயம் செய்தான். அதினால் **வாதை** நிறுத்தப்பட்டது. **(சங் 106 : 30)**
12. விரும்பினான் அது அவனுக்கு வரும், விரும்பாமற் போனது அது அவனுக்கு தூரமாய் விலகிப்போம் என்று எங்கே வாசிக்கிறோம். **சாபம், ஆசீர்வாதம் (சங் 109 : 17)**
13. **கர்த்தருக்குப் பயந்தவர்களின்** சந்ததி பூமியில் பலத்திருக்கும், **செம்மையானவர்களின்** வம்சம் ஆசீர்வதிக்கப்படும். **(சங் 112 : 1, 2)**
14. பூமி பிளந்து **தாத்தானை** விழுங்கி, **அபிராமின்** கூட்டத்தை மூடிப்போட்டது. **(சங் 106 : 17)**
15. **சீயோனில்** கர்த்தருடைய நாமத்தையும், **எருசலேமில்** அவருடைய துதியையும் பிரஸ்தாபப்படுத்துவார்கள். **(சங் 102 : 22)**
16. ஒரே வாக்கியம் அதிகாரத்தின் தொடக்க முதல் கடைசி வசனம்வரை தொடர்ந்து வருவது. **சங் 136-ம் அதிகாரம். (அவர் கிருபை என்றுமுள்ளது என்ற வார்த்தை)**
17. **நியாயப்பிரமாணமானது ஒன்றையும்** பூரணப்படுத்துவதில்லை. **அதிக நன்மையான நம்பிக்கையை வருவிப்பதோ** பூரணப்படுத்துகிறது. **(எபி 7 : 19)**
18. **மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன்** இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சியின் வாக்கினாலே சாகிறான். **(எபி 10 : 28)**
19. **மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை** விட்டுவிடாதிருங்கள் என்றும் **நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல்** உறுதியாயிருக்கக் கடவோம் என்றும் எழுதப்பட்டுள்ளது. **(எபி 10 : 35, 25, 23)**
20. **இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களில்** பூரணப்படுத்துவது தேவனுக்கு ஏற்றதாயிருந்தது என்று வாசிக்கிறோம். **(எபி 2 : 10)**
21. **ஜீவனுள்ள தேவனைவிட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் இராதபடிக்கு** எச்சரிக்கையாக இருக்க வேண்டும் **(எபி 3 : 12). நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு, அவைகளை** மிகுந்த ஜாக்கிரதையாக கவனிக்க வேண்டும். **(எபி 2 : 1)**



22. மனுஷருக்காக தேவக் காரியங்களுக்காக நியமிக்கப்படுகிறவன். **பிரதான ஆசாரியன் (எபி 5 : 1)**
23. **உங்களை நடத்துகிறவர்கள் உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால் அவர்களுக்கு** கீழ்ப்படிந்து அடங்க வேண்டும். **(எபி 13 : 17)**
24. **அன்றியும் நன்மை செய்யவும், தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள். இப்படிப்பட்ட** பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார் என்று எழுதப்பட்டுள்ளது. **(எபி 13 : 16)**
25. **தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது** தேவனால் ஆசீர்வாதம் பெறும். **(எபி 6 : 7)**
26. **சந்தேகப்படுகிறவன்** காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறார்கள். **(யாக் 1 : 6)**
27. வேதவாக்கியம் சொல்லும் ராஜரீக பிரமாணம் - **உன்னிடத்தில் நீ அன்பு கூறுவதுபோல பிறனிடத்தில் அன்பு கூறுவாயாக. (யாக் 2 : 8)**
28. **நியாயத்தீர்ப்புக்கு** முன்பாக இரக்கம் மேன்மை பாராட்டும். இரக்கம் செய்யாதவனுக்கு **இரக்கமில்லாத நியாயத்தீர்ப்பு** கிடைக்கும். **(யாக் 2 : 13)**
29. பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தி - **திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக் கொள்ளுகிறதுமே. (யாக் 1 : 27)**
30. **கிரியைகளினாலே** விசுவாசம் பூரணப்படுகிறது. **கிரியை இல்லாத விசுவாசம்** செத்ததாயிருக்கிறது. **(யாக் 2 : 22, 26, 20, 17)**

மேற்கண்ட கேள்விகளுக்கு வேத ஆதாரத்துடன் பதில் எழுதியவர்களின் பெயரும் மதிப்பெண்களும் பின்வருமாறு. (90-க்கு)

| | | |
|---|---|---|
| 1. | Sis. மெர்சி டேனியல், கோவை | - 90 |
| 2. | Mrs. ரீனா கென்னடி, சென்னை - 62 | - 90 |
| 3. | Mrs. L. சந்திரசேகரன், பெரியார்நகர் | - 90 |
| 4. | Bro.I. செல்வராஜ், கோவை | - 90 |
| 5. | Mrs. டாரதி சாமுவேல், திருமுல்லைவாயில் | - 90 |
| 6. | Mrs. ஜெஸிந்தா விக்டர்சாம், திருநின்றவூர் | - 90 |
| 7. | Mrs.J. பிளாரன்ஸ் விக்டர், அம்பத்தூர் - 53 | - 90 |
| 8. | Bro. M. ராஜா, ஓசூர் | - 89 |
| 9. | Bro. ஜோதிகுமார், கிருஷ்ணகிரி | - 89 |
| 10. | Mrs. தாசனி பக்தவச்சலம், கே.கே.மாவட்டம் | - 88 |
| 11. | Sis. J. எப்சிபா எட்வர்ட், ஆவடி | - 88 |
| 12. | Bro. J. கோட்டார் ஜெயராஜ், திருநெல்வேலி | - 88 |
| 13. | Mrs. J. ஜான்சி, ஆனைமலை | - 88 |

14. Bro. தயாளன் தியாகராஜ், வத்தலகுண்டு - 87
15. Mrs. வசந்தி சாமுவேல், சென்னை – 37 - 86
16. Mrs. வசந்தா சாமுவேல்ராஜ், திருநின்றவூர் - 86
17. Mrs. நிர்மலா இம்மானுவேல், சென்னை-7 - 86
18. Sis. D. ரோஸ்லி, கோவை - 86
19. Sis. டாரதி ஜோசப், கோவை - 86
20. Mrs. ஜாய்ஸ் ஐசக், தூத்துக்குடி - 85
21. Mrs. ரத்னாபாய், ஆவடி - 85
22. Mrs. ஜடாபால், மார்த்தாண்டம் - 83
23. Sis. சுசிலா காட்ஃபிரே, அலகாபாத் - 83
24. Sis. P. டில்லி, கே.கே.மாவட்டம் - 80
25. Sis. ஜெயம்மாள் அருளானந்தம், திருப்பூர் - 78
26. Mrs. R. வீனா, காருண்யா - 78
27. Mr. S. வில்லியம், கோவை - 77
28. Sis. R. ஜெபக்கனி மார்க்கஸ், விருதுநகர் - 75
29. Sis. சரோஜினி எலிசபெத் ரோஸ்,சென்னை - 99 - 75
30. Sis. ஞானபரணம், திருப்பூர் - 72
31. Sis. C. பாக்கியம் சின்னமணி, கோவை - 72
32. Mrs. ராணி பெனாயா, கோவை - 71
33. Mrs. ரஞ்சினி சாம், கே.கே.மாவட்டம் - 70

## தந்தை பெரியார் நாத்திகர் ஆனது ஏன்?

சிறந்த பக்தனாக இருந்த இவர், கோவில் பூஜாரிகளின் அநாகரீக, அட்டூழிய அந்தரங்கத்தை கண்டார். பின்பு கல்வியில் குறைந்தவராயினும் அறிவில் மேதை. எனவே மதநூல்களை ஆராய்ந்தார். சரித்திரங்களை அலசினார். அப்போது ஆரியர்கள் திராவிடர்களை அடிமைப்படுத்தி, அவர்களை வருணாசிரம தர்ம மத கொள்கையால் பிரித்து, மெய்பக்தியை அழித்து கற்பனைகளை கட்டவிழ்த்துவிட்டதை கண்டார். வெகுண்டு எழுந்தார். புரட்சி ஏற்பட்டது. தமிழன் தூக்கத்திலிருந்து விழித்தான். திராவிட கழகம் என்ற புரட்சிகரமான இயக்கம் தோன்றியது. பகுத்தறிவில் உணர்வு கொண்டோர் யாவரும் அவருடன் சேர்ந்து கொண்டனர். இன்றும் அநேக பெரியார்கள் சேர்ந்து வருகின்றனர்.

உண்மையில் பெரியாரிசம் கடவுள் மறுப்பு கொள்கையல்ல. எனினும் ஆரியரால் சொல்லப்படும் கடவுள்களை கடவுள் தன்மையுள்ளவர்களாய் ஏற்க முடியாததால் நாத்திகத்தையும் சத்தமாக கூறி பின்பற்ற வேண்டியதாயிற்று.

அறிஞர் அண்ணா ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற திருமூலர் கூற்றை உள்வாங்கி, தந்தை பெரியார் உயிரோடிருந்த போதே உரக்க உபதேசித்தார். அதனை அவர் எதிர்க்கவில்லை.



நான் பெரியார்போல் நீங்களும் நாத்திகராகுங்கள் என எழுதவில்லை. பின்பற்றுவதன் பின்னணியை ஆராய்ந்தால் உண்மை விளங்கும். அப்போது மெய்யான தெய்வம் தெரிவார். ஆத்துமா மீட்படையும்.

## பைபிளில் திருத்தப்படாத சத்தியம் !

ஈசாவைக் (இயேசுவைக்) குறித்து குரான் சொல்வது என்ன?
அல்லா ஈசாவை (இயேசுவை) அனுப்பி, பரிசுத்த ஆவியினால் அவருக்கு உதவி செய்தார் (சூரா 2 : 87)

- ஈசாவை (இயேசுவை) அல்லா உயர்த்தினார் (சூரா 2 : 253)
- ஈசா (இயேசு) நீதிமானாகவும் மற்றும் பாவமில்லாதவராகவும் இருந்தார். (சூரா 3 : 46, 6 : 85, 19 : 19)
- ஈசா (இயேசு) மரித்ததிலிருந்து உயிரோடு எழுந்தார். (சூரா 19:33 ;4)
- ஒரு மார்க்கத்தை ஸ்தாபிக்கும்படி ஈசாவுக்கு (இயேசுவுக்கு) அல்லா கட்டளையிட்டார் (சூரா 42 : 13)
- ஈசா (இயேசு) பரலோகத்திற்கு (சொர்க்கத்திற்கு) ஏறிச் சென்றார். (சூரா 4 : 157 ; 58) இன்னும் பல இப்படி குர்ரானிலேயே இயேசுவை பற்றி எழுதியிருப்பதை விசுவாசித்தாலே இயேசுவை தேவ குமாரன் என்றும் அவர் மூலமே மனுக்குலம் இரட்சிக்கப்பட முடியும் என்றும், கிறிஸ்தவ வேதம் தேவன் மனுக்குலத்துக்குத் தந்த மகத்துவமான பொக்கிஷம் என்றும் நம்பி வாசிக்கலாம், விசுவாசித்து நித்திய ஜீவனை அடையலாம்.

**வேதாகமம் - இயேசுவின் வார்த்தை என குர்ரானில் கூறப்பட்டுள்ளது :**

ஈசாவின் சீடர்களால் இஞ்சிலில் (நற்செய்தி நூல்) அவருடைய போதனைகள் எழுதிவைக்கப்பட்டுள்ளது. ஈசா மற்றும் அவருடைய செய்தியில் நம்பிக்கை வைக்கும்படிக்கு அல்லாவினால் சீடர்கள் ஏவப்பட்டனர் என்று சூரா 5 : 11 குறிப்பிடுகிறது. அல்லாவின் உதவியாளர்களாக (சூரா 61 : 6, 14) ஈசாவின் சீடர்கள் அவருடைய போதனைகளை துல்லியமாக பதிவு செய்திருப்பர்.

தோரா (Torah) மற்றும் இன்ஜிலையும் (Gospels) நிலைநிறுத்தி அவ்விரண்டிற்கும் கீழ்படிய வேண்டுமென்றும் குர்ஆன் முஸ்லீம்களுக்கு போதிக்கிறது (சூரா 5: 44, 8).

நற்செய்தி நூல்கள் திருத்தப்பட்டிருக்குமானால், முகமதுவுக்கு இந்தப் போதனை வழங்கப்பட்டிருக்காது. ஆகவே, முகமதுவின் காலத்தில் இருந்த நற்செய்தி நூல்களின் பிரதிகள் நம்பத்தக்கவையாகவும் துல்லியமானவையாகவும் இருந்தன. முகமது வாழ்ந்த காலத்துக்கும் 450 ஆண்டுகளுக்கு முந்திய காலத்தில் எழுதப்பட்ட நற்செய்தி நூல் பிரதிகள் உள்ளன. மிகவும் பழமையான பிரதிகள், முகமதுவின் காலத்தில் உள்ள பிரதிகள் மற்றும் முகமதுவின் காலத்துக்கு பிந்தினவையாக குறிக்கப்பட்டிருக்கும் கைப்பிரதிகள் இவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நற்

செய்தி நூல்களின் அனைத்துப் பிரதிகளும் இயேசு மற்றும் அவருடைய போதனைகள் அனைத்தும் முரண்பாடற்றவையாக இருக்கின்றன. நற்செய்தி நூல்கள் திருத்தப்பட்டிருக்கின்றன என்று சில முஸ்லீம் மதவாதிகள் கூறும் எந்தச் சான்றும் நிரூபிக்க முடியாதவை. ஆகவே, இயேசுவின் எல்லா போதனைகளும் வேதாகமத்தில் துல்லியமாக பாதுகாக்கப்பட்டுள்ளன. இயேசுவின் வாழ்க்கை, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் உட்பட யாவும் உறுதி செய்யப்பட்டவையே.

நற்செய்தி நூல்கள் இயேசுவைக் குறித்து என்ன போதிக்கின்றன? இயேசு தான் கொலை செய்யப்பட்டு, மரித்து பின்பு மரித்தோரிலிருந்து எழும்புவேன் என்று கூறி தனது வாழ்வு நிகழ்வுகளை முன் அறிவித்ததை நற்செய்தி நூல்கள் பதிவு செய்திருக்கின்றன. (மத் 20 : 19) இயேசு முன்னறிவித்ததைப் போலவே அவை நடந்தன என்று நற்செய்தி நூல்கள் பதிவு செய்திருக்கின்றன (மத் 27 : 28, மாற் 15, 16, லூக் 23, 24 ; யோவான் 19-21).

பாவமில்லாத இயேசு கொல்லப்படுவதற்காக தன்னைத்தான் ஏன் ஒப்புக்கொடுக்க வேண்டும்? நீங்கள் உங்கள் நண்பனுக்காக உயிரைக் கொடுக்கும் அன்பைவிட பெரிய அன்பு வேறு இல்லை என்று இயேசு சொன்னார் (யோவான் 15 : 13). தனது தீர்க்கதரிசி தவறாக நடத்தப்படுவதற்கும், கொல்லப்படுவதற்கும் தேவன் ஏன் அனுமதித்தார்? நமக்காக தியாக பலியாக இயேசுவை அனுப்புமளவுக்கு அவர் நம்மில் அன்பு கூர்ந்தார் என்று யோவா 3 : 16 சொல்கிறது. இவைகளை விசுவாசிப்போமாக!

## <u>கடவுள் இருக்கிறார் நிரூபனம்</u>

கடவுள் இருக்கிறார் என்ற தலைப்பின்கீழ் கடந்த ஐந்து இதழ்களிலும் அநேக சரித்திர, பூகோள, விஞ்ஞான தத்துவ சான்றுகள் மூலமாக பல்வேறு நிரூபனங்களை ஆராய்ந்து வருகிறோம். தொடர்ந்து இவ்விதழிலும் சில ஆதாரங்களை சிந்திப்போம்.

பள்ளிக்கூடம் ஒன்றில் ஆசிரியரைப் பார்த்து, சார் கடவுள் இருக்கிறாரா காண்பிப்பீர்களா? என்று மாணவன் ஒருவன் கேட்டான். சற்று பொறுங்கள் காட்டுகிறேன் என்றவர் மதியம் வரை காத்திருந்து மாணவர்களை பள்ளி அறைக்கு வெளியே அழைத்து, அதோ பாருங்கள் அந்த சூரியனுக்குப் பின்னால்தான் கடவுள் இருக்கிறார் உற்றுப் பாருங்கள் என்றார். மாணவர்கள் கண்கள் கூசியதால் சூரியனைப் பார்க்க முடியாமல், சார் கண்கள் கூசுகிறதே எப்படிப் பார்க்க முடியும் என்றார்கள். அதற்கு ஆசிரியர், கடவுள் படைத்த சூரியனையே நீங்கள் பார்க்க முடியவில்லையே, சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணும் தேவனை எப்படிப் பார்ப்பீர்கள் (1 தீமோ 6 : 16) என்றார். மட்டுமல்லாமல், பிள்ளைகளே நீங்கள் வெறுங்கண்ணால் பார்க்க முடியாது. ஆனால் ஒரு கண்ணாடியில் புகைபிடித்தோ அல்லது கருப்புக் கண்ணாடியிலோ பார்த்தால் சூரியனை பார்க்க முடிவதுபோல, நாம் சுத்த இருதயத்தோடு தேவனைத் தேடினால்தான் அவர் தென்படுவர். சுத்த இருதயம் உள்ளவர்களுக்கே தேவன் தம்மை வெளிப்படுத்தவும் விரும்புகிறார். சிலர் கடவுளைக் காண பல புண்ணியத் தளங்களுக்குப் போவதும், தங்களை சந்நியாசிகளாகவும், சாமியார்களாகவும் துறவரம் பூண காரணம் என்ன? தேவனைக் காணத் தேடிய வழிகளே. கிறிஸ்தவம் தேவனைக் காண எளிய வழிகாட்டுகிறது. நானே வழி என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவிடம் (தேவனிடம்) வரான் என்று இயேசு கூறியதன் பொருள் அதுவே.

இரண்டாவதாக, தம்பீ, நீ உன் அப்பா இவர்தான் என்று மற்றவர்கள், உன் தாய் சொல்லித்தான் அவரை அப்பா என்று நம்புகிறாயே அல்லாமல், நீ அவர்தான் உன் தகப்பன் என்று உறுதியாகச் சொல்ல முடியுமா? இதுதான் உன் தாயார் என்று நீ உறுதியாக உன் தாயாரைச் சொல்ல முடியுமா? உன்னைப் பெற்றவர்களை, உன் தாயாரை, தகப்பனாரையே மற்றவர்கள் சொல்லித்தான் நீ தெரிந்து கொள்கிறாய். ஆதாவது சிறுவயது முதல் அப்பா, அம்மா என்று அழைத்துப் பழகியதால் அவர்களை அப்பா அம்மா என்கிறாய். ஆனால் அவர்கள்தான் உன் பெற்றோர் என்று நிரூபிக்க முடியுமா? அது முடியாததுப் போல தேவனையும் மற்றவர்கள் <u>சொல்வதை வைத்துத்தான்</u> நம்பியாக வேண்டும். அதேபோல தேவனும், நானே உன் தேவனாகிய கர்த்தர். நான், நானே கர்த்தர். வேறொரு தேவன் இல்லை (ஏசா 43 : 10, 11) என்று கூறுவதையும் நம்பித்தான் ஆக வேண்டும். சிந்தித்துப் பாருங்கள். கடவுளை உறுதிப்படுத்திக் கொள்ள இதுவும் ஒரு வழியே.

மூன்றாவதாக ஒருவனுக்கு அவனது தாய், தகப்பன், தாத்தா, பாட்டி, தெரியும். அவர்களின் தாத்தா பாட்டி தெரியுமா என்றால் நிச்சயம் தெரியவே தெரியாது என்பார்கள். அதேபோல ஒருவனை அழைத்து உன் தகப்பன், தாயார், தாத்தா, பாட்டி என்று உன் மூதாதையர்களின் 10 தலைமுறையை எழுதத் தெரியுமா என்றால் உலகில் ஒருவர்கூட எனக்கு தெரியாது என்கிறார்கள். ஆனால் பைபிள் உலகம் தோன்றியது முதல், தேவன் இப்போது இருக்கிற மனுஷ ஜாதியான அனைத்து தேசத்து மக்களின் ஆதி பிதா, குமாரன், பேரன், வழித்தோன்றல் என்று கிறிஸ்துவுக்கு முன்னுள்ள அனைவரின் பெயர்களையும் பட்டியலிட்டு கூறுகிறதே இதை தேவன் மோசே என்கிற பக்தனுக்கும் விவரித்துக் காண்பித்து எழுதும் படியும் கற்பித்தாரே, அதேவிதமாய் அவர் எழுதியிருக்கிற தலைமுறைகளில் ஒரு பிசகும் காணப்படாமல் திட்டமும் தெளிவுமாய் உள்ளதே எப்படி? தேவன் என்று ஒருவர் இருப்பதாலும் அவருக்கே அனைத்தும் தெரிந்திருப்பதாலும் அவர் சொல்லியிருப்பவைகள் உண்மை என்று உறுதி செய்யப்பட்டிருப்பதாலும் தேவன் ஒருவர் உண்டென்பதை பரிசுத்த வேதாகமம் மெய்ப்பிக்கிறது. அவர் சரித்திரங்களைப் படைக்கும் சரித்திர நாயகர். அல்லேலூயா!

நான்கு : ஒருமுறை விஞ்ஞானி நியூட்டனினின் உதவியாளர் (விஞ்ஞானி) தான் கடவுளை நம்பமாட்டேன் என்று வைராக்கியமாயிருந்தார். சமயம் வரட்டும் அவருக்கு கடவுளை தெரிய வைக்கிறேன் என்று நியூட்டனும் காலம் தாழ்த்தி வந்தார். அப்போது நியூட்டன் செயற்கையாக ஒரு அறைக்குள் சூரிய குடும்பத்தின் இயக்கம் பற்றிய ஆராய்ச்சிக்கு உதவியாயிருக்கும் வண்ணம் ஒரு செயற்கை - கோள்களின் சுழற்சியைக் காட்டும் உபகரணம் ஒன்றை வடிவமைத்து அது இயங்கும் வண்ணம் வைத்திருந்தார். ஒரு நாள் விஞ்ஞானி நியூட்டனின் உதவியாளர் திடீரென

அந்த அறைக்குள் நுழைந்து பார்த்துவிட்டு ஆச்சரியப்பட்டு இந்த உப கரணத்தை பண்ணியது யார். எத்தனை அழகாய், தத்துரூபமாய் இருக் கிறதே என்றார். அதற்கு நியூட்டன். அதை யாரும் செய்யவில்லை. தானாய் வந்தது என்றார். அதெப்படி இத்தனை அழகான ஒரு அமைப்பு ஒருவரும் செய்யாமல் தானாய் வரும் ? என்றார். அதற்கு நியூட்டன்' இதுவே தானாய் வராமல் ஒருவர் செய்துதான் இருக்க வேண்டும் என் கிறீரே அப்படியே சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கிரகங்கள் யாவும் தானாய் அல்ல, தேவன் சிருஷ்டித்ததினாலேயே உண்டாயிருக்கிறது. தேவனை நாம் காணாததினாலே அவர் இல்லை என்று கூறக்கூடாது. அவர் ஒருவரும் காணக்கூடாதவராய் இருக்கிறார். அவரது தற்சொரூப மாய்த்தான் இயேசு தேவ குமாரனாய் இவ்வுலகத்திற்கு வந்தார். அவரை, அவரது வார்த்தைகளை நம்புவதே, தேவன் இருக்கிறார் என்பதற்கு அடையாளம் என்றார். உதவியாளர் ஒன்றும் பேசவில்லை. அநேகர் கட வுளை நம்புவதற்கு தகுதியான சிந்தனை, செயல், சூழ்நிலை, அனுபவம் உண்டானால் தான் நம்புகிறார்கள். எப்படியோ கடவுள் இருக்கிறார், இருக்கவே இருக்கிறார். நம்பினோர் கெடுவதில்லை. நான்கு முறை தீர்ப்பு என்று சினிமாக்காரனும் பாடி வைத்துள்ளான். நம்புவோம். அல்லேலூயா! (தொடரும்)

## ஜூலை மாதக் கேள்விகள்

நீதிமொழிகள், 1 பேதுரு, 2 பேதுரு ஆகிய புத்தகங்களிலிருந்து இம்மாத கேள்விகள் எடுக்கப்பட்டுள்ளன. வாசகர்கள் இரண்டு வருடத்தில் ஒருமுறை வேதாகமத்தை தெளிவாக வாசித்து பயனடைய மாதம் இரண்டு புத்தகங்களிலிருந்து கேள்விகள் எடுக்கப்படுகின்றன. (அடுத்த மாதம் பிரசங்கி, உன்னதப்பாட்டு, 1 யோவான், 2 யோவான் புத்தகங் கள் எடுத்துக் கொள்ளப்படும்) கீழ்கண்ட கேள்விகளுக்கு தக்க பதிலை, வேத ஆதாரத்துடன் (Bible Ref) எழுதி அனுப்புங்கள். உங்கள் விடை களை 1.8.2017-க்குள் வந்து சேரும்படி அனுப்பவும். ***தயவு செய்து உங்கள் பதில்களை இன்லாண்டு கவர்களில் எழுதி மூன்று பக்கமும் ஒட்டி அனுப்ப வேண்டாம். அப்படி வரும் கவர்களை பிரித்து படிக்க இயலவில்லை. தனித்தாளில் எழுதி உறையில் போட்டு அனுப்பவும்.*** விலாசம் **ஆசிரியர், மணவாட்டி, திருமுல்லைவாயில், சென்னை-62.**

1. எது காப்பாற்றும், எது பாதுகாக்கும்?
2. ஏழு கேள்விகள் ஒரே வசனத்தில் வருவதெங்கே?
3. இரகசியத்தை வெளிப்படுத்துகிறவன் யார்? காரியத்தை அடக்குகிறவன் யார்?
4. எது நல்லதல்ல? எது நித்திய விருந்து ?
5. எலும்புருக்கி எது? எலும்பையும் நொறுக்கும் என்று சொல்லப்பட்டது எது?
6. எது உன் ஆத்துமாவுக்கு இன்பமாயிருக்கும்?
7. எதினால் மனுஷர் தீமையை விட்டுவிலகுவார்கள்? யாருக்கு புத்திமதி விசனமாயிருக்கும்?
8. எது பூரிப்பாக்கும், எது புஷ்டியாக்கும்?
9. ஜீவஊற்று எது? இரு உதாரணம் தரவும்.
10. யாருடைய வேர் கனி கொடுக்கம், யாருடைய வேர் அசையாது?
11. யார் ஆக்கினைக்குத் தப்பான்? கேடுள்ள நாவுக்கு செவிகொடுக்கிறவன் யார்?
12. யார் ஆசீர்வதிக்கப்படுவான்? எது ஆசீர்வாதம் பெறாது?
13. விலையுயர்ந்த இரத்தினம் எது? சுத்த வெள்ளி எது?
14. நிரப்புக : நீதி…………………, தீமையை பின்தொடரும்……………..
15. ஜீவஊற்று எங்கிருந்து புறப்படும்? மரணத்துக்கு தப்புவிப்பது எது?
16. நீதிமானுடைய வேர் எதைக் கொடுக்கும்? எலும்புருக்கி எது?
17. முன்னுக்கு பின் முரணாக எழுதப்பட்ட இரண்டு வசனங்கள் எவை? அதாவது ஒரே காரியத்தை செய் என்றும் செய்யாதே என்றும் எதிர்மறையாய் முன்னும் பின்னும் வரும் இருவசனங்கள் எவை?
18. தன் பார்வைக்கு அதிக ஞானமுள்ளவன் யார்? ஆபத்தைக் கண்டு மறைந்து கொள்ளுகிறவன் யார்?
19. தங்களுக்கு தீவிரமாக அழிவை வருவித்து கொள்பவர்கள் யார்?
20. நீங்கள் எதற்கு பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள் என்று வாசிக்கிறோம்?
21. விசுவாசத்தின் பலன் எது? தேவனுக்கு முன்பாகப் பிரீதியாயிருப்பது எது?
22. எது அலங்காரமாயிருக்கக்கடவது, எது மேன்மையாயிருக்கும் என்று வாசிக்கிறோம்?
23. எதைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி அழைக்கப்பட்டவர்கள் என்று அறிந்து நாம் என்ன செய்ய வேண்டும் என்று வாசிக்கிறோம்?
24. எதற்கு ஜாக்கிரதையாயிருக்க வேண்டும், எதை நாம் அணிந்துக் கொள்ள வேண்டும்?

- தயாரித்தவர் **சகோ. விக்டர் தேவதாஸ்**, திருமுல்லைவாயில்.

## வேதத்தில் தமிழ் மன்னன்

ஆங்கிலத்தில் பொனீஷியா எனப்படும் பெனிக்கேயா என்ற நாட்டை ஆட்சி செய்த ஈராம் என்ற மன்னன் தமிழ் பேசும் ஆதிகால திரா விடன் என்றே ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ஈராம் என்ற பெயருக்கு, மேல் ஜாதியில் பிறந்தவன் என்பது அர்த்தமாம். அவன் ஆட்சி செய்த பெனிக்கேயா, தீரு.சீதோம் ஆகிய பகுதிகள் ஆசேர் என்ற இஸ்ரவேலின் கோத்திரத்திற்கு வாக்களிக்கப்பட்ட பகுதி ஆகும் (யோசுவா 19 : 24-29). ஆனால் ஆசேர் கோத்திரத்தில் திராவிடரின் படை வலிமையைக் கண்டு பயந்து கர்த்தர் மேலுள்ள விசுவாசத்தை கைவிட்டனர். ஆகவே, திராவிட ருடன் போரிட்டு வெற்றி பெற முயற்சி செய்யாமல் திராவிட ஆட்சிக்கு அடங்கி வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது.

பெனிக்கேயாவை ஆட்சி செய்த ஈராம் என்ற மன்னன் தாவீதைப் போல கர்த்தரிடத்தில் நம்பிக்கையுள்ளவனும், தாவீதுக்கும் அவன் மகனா கிய சாலமோனுக்கும் தோழனுமாயிருந்தான். எருசலேமில் கட்டப்பட்ட

தேவாலயத்திற்கு பேருதவி செய்து வந்தான். (2 சாமு 5 : 11, 1 நாளா 14 : 1, 1 ராஜா 5 : 1-18, 9 : 11-14, 26-28, 10 : 11, 2 நாளா 2 : 3-18)

கிறிஸ்து உலகில் வாழ்ந்த காலத்தில் பெனிக்கேயர்களான திராவிடரை சென்று சந்தித்தார் என்றும் திராவிடர்களும் அவரை சந்திக்க வந்தனர் என்றும் புதிய ஏற்பாடு கூறுகிறது. (லூக் 6 : 17, மத் 15 : 21). ***வேதாகம உண்மைகளின்படி தமிழ் பேசும் திராவிட இனம் கருப்பு நிறமுடைய காம் என்பவனின் இனத்தைச் சேர்ந்ததாகும்.*** பல்வேறு காரணங்களால் உலகின் பல பகுதிகளில் அவர்கள் சிதறி வாழ்ந்தனர். இன்றும் இந்நிலை நீடிக்கிறது. முற்காலத்தில் திராவிடர்கள் கடல் கடந்து திரு. சீதோன் மற்றுமுள்ள பகுதிகளில் குடியேறினர்.

இந்தியாவில் குடியேறிய முற்கால திராவிடர்கள் விவசாயத்தில் ஈடுபட வேண்டிய அவசியமில்லாத அளவுக்கு இந்தியாவில் விவசாயப் பொருட்கள் ஏராளமாகக் கிடைத்தன. இதனை ரிக் வேதமாகிய இலக்கியம் திராவிட பெண்களைப் பற்றி குறிப்பிடும் போது, பெண்கள் பாலில் குளிக்கிறார்கள் என்று இந்திய திராவிட பெண்மணிகளின் சிறப்பை வர்ணிக்கிறது. இதைப்பற்றி மறைந்த தமிழக முன்னாள் முதலமைச்சர் அண்ணா அவர்கள் தமது தமிழர் மதம் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். தென்னை மற்றும் பனை மரங்கள் ஏராளமாக இருந்தன. இவைகளில் ஏறுதல் முக்கிய தொழிலாக இருந்தது.

கள், பதநீர், பனை வெல்லம் தயாரித்தல், தென்னை நாறு கொண்டு பலமான கயிறு திரித்தல், கட்டு மரம் கட்டுதல், கடலில் வாழும் திமிங்கலம் போன்றவற்றை வேட்டையாடுதல், கலையில் யானை போன்றவைகளை வேட்டையாடி வேலைக்கு பழக்குவித்தல், வலை விரித்து திறமையாக வேட்டையாடுதல் போன்றவைகளில் சிறந்து விளங்கினர். வேட்டையாடுவதில் கிடைத்த தோல், நரம்புகள், புலி பற்கள், நரி பற்கள், யானைத் தந்தங்கள் போன்றவற்றை பலவித காரியங்களுக்கு பயன்படுத்தினர். தோல் கருவியான பறையை கையாலும் குச்சிகளாலும் அடித்து ஒலி எழுப்பி அதற்கேற்ப நடனம் ஆடினார்கள்.

அடிக்கப்பட்ட பறை சத்தம் மேள சத்தமாகி தாளத்திற்கேற்ப தள்ளாட்டம் போட வைத்தது. அதை தொடர்ந்து பாட்டும் வந்தது. அன்றைய திராவிடர்கள் பிறநாட்டவரால் பொதுவாக பல பெயர்களில் அழைக்கப்பட்டனர்.

ஒரு தூய தமிழ்ச் சொல்லே பெனிக்கேறி, பெனிக்கேயர் என்றும் மாறியதாக கருதுகின்றனர். இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களில் சிலர் இச்சரித்திரத்தை மறைக்கவே முயலுகின்றனர். பைபிளைப் பற்றிய நினைப்பே வராதபடி பைபிள் சுட்டிக்காட்டும் காம், ஈராம், பெனிக்யோர் போன்றவர்களைப் பற்றிய பைபிள் உண்மைகள் மறைக்கப்படுகின்றன. பெனிக்கேயாவில் காணப்படும் கல்வெட்டுகளில் உள்ள தமிழ் எழுத்துக்கள், நாணயங்களில் உள்ள கட்டு மரம், தலைப்பாகை போன்ற உருவங்களை ஆராய்ச்சி செய்து, பெனிக்கேயர் என்பவர்கள் தமிழ் பேசிய திராவிடர்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றனர்.

ஒரே ஜாதி தான் பல ஜாதியாக மாறிப் போனது. தமிழர்கள் தங்கள் வரலாறுகளை தொலைத்துவிட்டார்கள். வரலாற்றை பறிகொடுத்து



விட்டதை அறியாமல், ஒற்றுமையின்றி தேவனுடைய சபையிலே தேவையில்லாத ஜாதிச் சண்டையில் ஈடுபட்டு தேவ ஆவியை துக்கப்படுத்துகிறார்கள். இந்த செயல் எவ்வளவு வருத்தம் அளிக்கிறது. ஒற்றுமை வராதபடி கிறிஸ்தவ மக்களின் மனதிலே ஆவியானவர் செயல்பட வேண்டும். தொலைத்து விட்ட நமது சரித்திரங்களை அறிய கர்த்தர் தான் நமக்கு உதவி செய்ய வேண்டும். ஒற்றுமை சபையிலும் சமுதாயத்திலும் காக்கப்பட வேண்டும்.

இஸ்ரவேலில் ஒரு கோத்திரத்தை அடக்கி ஆண்ட மன்னன் ஈராமையே வேதம் குறிப்பிடுகிறது. எப்படியும் மேல் ஜாதி என்று பெயர் பெற்றிருந்த தமிழ் மன்னனாகிய ஈராம் கர்த்தரை அறிந்தவனாக அவரை சிநேகித்தான் என்பது மகிழ்ச்சியான செய்தியாகும். ஈராம் சிநேகித்த கர்த்தரை நாம் சிநேகிக்கிறோமா? அப்படி விசுவாசிக்கவும் சிநேகிக்கவும் கர்த்தரே உதவி செய்வாராக!

(ஆதாரம் : பேராசிரியர் பெ. சிவராமன் எழுதிய தமிழ் எழுத்துகளில் சில சீர்திருத்தங்கள் - நன்றி A. இளங்கோ, லால்குடி)

## சிரியுங்கள் ! சிந்தியுங்கள்!!

***மனைவி*** : என்னங்க, காணிக்கை போட கொண்டுபோன ரூபாய் நோட்டை அப்படியே கொண்டு வந்துட்டீங்க...

***கணவர்*** : இன்னைக்குத்தான் நீ இதை கண்டுபிடிச்சியா! நான் பாட்டு பாடுற போதுதானே எல்லோரும் காணிக்கை போடுறாங்க. நான் போடாதது யாருக்குத் தெரியும்?

***மனைவி*** : ??? !!!

***சர்வர்*** : நீங்க போன பந்தியிலேயும் சாப்பிட்டதுபோல தெரியுதே.

***சாப்பிடுபவர்*** : நான் இரண்டு வீட்டுக்கும் சொந்தக்காரன். முதலிலே மாப்பிள்ளை வீட்டுக்காக சாப்பிட்டேன். இப்போ பெண் வீட்டுக்காக சாப்பிடறேன்.

***சர்வர்*** : ??? !!!

***பையன்*** : எங்கப்பா மாதிரி நானும் ஒரு பெரிய பாஸ்டரா ஆகணும்னு ஆசைப்பட்டேன்.

***பாஸ்டர்*** : உங்கப்பா பெரிய பாஸ்டரா ? எங்கே ஊழியம் செய்கிறார்?

***பையன்*** : அவரும் அதேமாதிரிதான் பெரிய பாஸ்டரா ஆகணும்னு ஆசைப்பட்டவர்... நிறைவேறாமலே போய்ச் சேர்ந்துவிட்டார்.

***பாஸ்டர்*** : ??? !!!

***கணவர்***: நம்ம சர்ச்சிலே பாத்ரூம், டாய்லெட்டை யாருமே கவனிக்கிறதில்லே.

***மனைவி*** : நீங்க காணிக்கை போடற நேரம் பார்த்து பாத்ரூம் போறதை எல்லோரும் தெரிஞ்சுக்கிட்டாங்க. பேசாம இருங்க.

***கணவர்*** : ??? !!!